241

ஸுபாநு ௵
மார்கழி - தை ௴

ஸம்புடம் - 3
ஸஞ்சிகை - 1

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 FEB 1944
MADRAS

15/2/44

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

... ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை

வ...
ரூபா...

January, 1944
Vol. 3, No. 1

SL
Q22ಣ241/N41
N44·3·1
2/0/24

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

பக்கம்

1.	ஸாம்ய புத்தி	2
2.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	5
3.	அடைக்கலப்பத்து	9
4.	மண் வியந்த மடமை	12
5.	ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரம்	16
6.	"தொல்லை யின்பத் திறுதி"	21
7.	செய்திகள்	25
8.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	34

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதி யனுப்புதல் நலமாகும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜூக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாசமும் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ அஹோபிலமடம் 40 வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்
ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்திர மஹா தேசிகர். 1916

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 3	ஸ்வபாநு ௵ மார்கழி - தை ௴	ஸஞ்சிகை 1

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவஶாத் கல்பித ஸந்நிதாந: |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாக:
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||"

21012
-600 088.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸாம்ய புத்தி

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி,
ஸ்ரீ அஹோபில மடத்து ஆஸ்தாந வித்வான்.]

[ஸம்புடம் 2, ஸஞ்சிகை 12, பக்கம் 143-ன் தொடர்ச்சி]

" 𑌚𑌾𑌣𑍍𑌡𑌾𑌲𑌶𑍍𑌚 𑌵𑌰𑌾𑌹𑌶𑍍𑌚 𑌕𑍁𑌕𑍍𑌕𑍁𑌟𑌃 𑌶𑍍𑌵𑌾 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌰𑌜𑌸𑍍𑌵𑌲𑌾 𑌚 𑌷𑌣𑍍𑌢𑌶𑍍𑌚 𑌨𑍇𑌕𑍍𑌷𑍇𑌰𑌨𑍍𑌨𑌶𑍍𑌨𑌤𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑍍 ॥"

[மநுஸ்ம்ருதி : அத். 3]

[சண்டாளன், பன்றி, கோழி, நாய், ருதுமதியான ஸ்த்ரீ, நபும்ஸகன், இவர்கள், ப்ராம்ஹண க்ஷத்ரிய வைஶ்யர்கள் சாப்பிடும் காலத்தில் பார்க்கக்கூடாது.]

" 𑌹𑍋𑌮𑍇 𑌪𑍍𑌰𑌦𑌾𑌨𑍇 𑌭𑍋𑌜𑍍𑌯𑍇 𑌚 𑌯𑌦𑍇𑌭𑌿𑌰𑌭𑌿𑌵𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ।
𑌦𑍈𑌵𑍇 𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 𑌪𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑍇 𑌵𑌾 𑌤𑌦𑍍𑌗𑌚𑍍𑌛𑌤𑍍𑌯𑌯𑌥𑌾𑌤𑌥𑌮𑍍 ॥"

[அக்நிஹோத்ரம் கோதாநம் ப்ராம்ஹண போஜநம் யாகம் ஶ்ராத்தம் இவை முதலிய வைதிக கார்யங்களைச் செய்யும்பொழுது, சண்டாளன் பன்றி முதலிய ப்ராணிகளால் பார்க்கப்பட்டால் அந்த வைதிக கார்யங்கள் பயனிலவாகப் போய்விடும்.]

" 𑌚𑌾𑌣𑍍𑌡𑌾𑌲𑌦𑌰𑍍𑌶𑌨𑍇 𑌸𑌦𑍍𑌯𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯𑌮𑍇𑌵𑌾𑌵𑌲𑍋𑌕𑌯𑍇𑌤𑍍 ।
𑌚𑌾𑌣𑍍𑌡𑌾𑌲𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑍇 𑌸𑌦𑍍𑌯𑌸𑍍𑌸𑌚𑍇𑌲𑌸𑍍𑌨𑌾𑌨𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ॥"

[பராஶர ஸ்ம்ருதி.]

[சண்டாளனைப் பார்த்தவுடன் த்விஜர்கள் ஸூர்யனைப் பார்க்க வேணும். சண்டாளனை த்விஜர்கள் தொட்டால் உடுத்த வஸ்த்ரத்துடன் ஸ்நாநம் பண்ணவேண்டும்.]

" 𑌭𑌾𑌣𑍍𑌡𑌸𑍍𑌥𑌮𑌨𑍍𑌤𑍍𑌯𑌜𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌜𑌲𑌂 𑌦𑌧𑌿 𑌪𑌯𑌃 𑌪𑌿𑌬𑍇𑌤𑍍 ।
𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑌃 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑍋 𑌵𑍈𑌶𑍍𑌯𑌃 𑌶𑍂𑌦𑍍𑌰𑌶𑍍𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌤𑌃 ॥"

சண்டாளர்களுடைய பாத்ரங்களி லிருக்கிற ஜலத்தையோ தயிரையோ பாலையோ ப்ராம்ஹணன் க்ஷத்ரியன் வைஶ்யன் ஶூத்ரன் இவர்கள், 'இது சண்டாளனுடைய பாத்ரம்' என்று தெரியாமல் சாப்பிட்டால் [" 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌕𑍂𑌰𑍍𑌚𑍋𑌪𑌵𑌾𑌸𑍇𑌨 𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌤𑍀𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌷𑍍𑌕𑍃𑌤𑌿𑌃 । 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌤𑍂𑌪𑌵𑌾𑌸𑍇𑌨 𑌤𑌥𑌾 𑌦𑌾𑌨𑍇𑌨 𑌶𑌕𑍍𑌤𑌿𑌤𑌃 ॥"] சண்டாளனுடைய பாத்ரத்திலிருந்த ஜலம் முதலியவைகளைச் சாப்பிட்ட தோஷத்திற்காக, ப்ராம்ஹணன் க்ஷத்ரியன் வைஶ்யன் இந்த மூன்று ஜாதி மனிதர்கள் ஒரு திநம் உபவாஸ மிருந்து ப்ரம்ஹ கூர்ச்ச பஞ்ச கவ்யத்தையும்

சாப்பிடவேண்டும். நான்காவது வர்ணத்தினர்கள் ஒரு திநம் உபவாஸமிருந்து, தன்னுடைய சக்திக்கு அநுகுணமாகத் தாநமும் செய்யவேண்டும். நான்காவது வர்ணத்தினர்களுக்கு வைதிக மந்த்ரங்களினல் செய்யவேண்டிய ப்ரம்ஹ கூர்ச்ச பஞ்சகவ்யத்தில் அதிகாரமில்லாததனல் அதற்குப் பதிலாகத் தாநம் விதிக்கப்பட்டிருக்கிறது.

"𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑍋 𑌭𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌾𑌨𑍍𑌨𑌂 𑌕𑌥𑌞𑍍𑌚𑌨 ।
𑌗𑍋𑌮𑍂𑌤𑍍𑌰𑌯𑌾𑌵𑌕𑌾𑌹𑌾𑌰𑍋 𑌦𑌶𑌰𑌾𑌤𑍍𑌰𑍇𑌣 𑌶𑍁𑌧𑍍𑌯𑌤𑌿 ॥"

[ப்ராம்ஹணன் தெரியாமல் சண்டாளனுடைய அந்நத்தைச் சாப்பிட்டால், பசுவின் மூத்ரத்தினல் அரிசியை சமைத்துப் பத்துத் திநங்கள் சாப்பிட்டால் அவன் சுத்தனுக ஆவான்.]

"𑌚𑌣𑍍𑌡𑌾𑌲𑌕𑍂𑌪𑌭𑌾𑌣𑍍𑌡𑍇𑌷𑍁 𑌯𑍋𑌽𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍 𑌪𑌿𑌬𑌤𑍇 𑌜𑌲𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌕𑌥𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌵𑌰𑍍𑌣𑍇 𑌵𑌰𑍍𑌣𑍇 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥"

"𑌚𑌰𑍇𑌤𑍍 𑌸𑌾𑌨𑍍𑌤𑌪𑌨𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌃 𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌤𑌦𑌰𑍍𑌧𑌂 𑌤𑍁 𑌚𑌰𑍇𑌦𑍍𑌵𑍈𑌶𑍍𑌯𑌃 𑌪𑌾𑌦𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌦𑌾𑌪𑌯𑍇𑌤𑍍 ॥"

சண்டாளனுடைய கிணற்றிலோ பாத்ரத்திலோ தெரியாமல் ஒருவன் ஜலத்தைச் சாப்பிட்டால், நான்கு ஜாதிகளுக்கும் என்ன ப்ராயஸ்சித்தம் சாஸ்த்ரங்களில் விதிக்கப்படுகிறதோ அதைச் செய்யவேண்டும். ப்ராம்ஹணன் ஷெ ஜலத்தைச் சாப்பிட்டால் அதற்கு ப்ராயஸ்சித்தமாக ஸாந்தபநம் என்கிற க்ருச்ரத்தை அநுஷ்டிக்கவேண்டும். க்ஷத்ரியன் ஷெ ஜலத்தைச் சாப்பிட்டால் ப்ராஜாபத்யம் என்கிற க்ருச்ரத்தை அநுஷ்டிக்கவேண்டும். வைஸ்யன் அதைச் சாப்பிட்டால் ப்ராஜாபத்ய க்ருச்ரத்தில் பாதியை அநுஷ்டிக்கவேண்டும். சூத்ரர்கள் ஷெ ஜலத்தைச் சாப்பிட்டால் கால்பங்கு ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை அநுஷ்டிக்கவேண்டும்.

ஸாந்தபந க்ருச்ரமாவது: பசுவின் மூத்ரம், பசுவின் சாணி, பசுவின் பால், பசுவின் தயிர், பசுவின் நெய், தர்ப்பம் சேர்ந்த ஜலம், இந்த ஆறு த்ரவ்யங்களைத் தினந்தோறும் ஒவ்வொன்ருகவே ஆஹாரம் பண்ணுமல் சாப்பிட்டு, ஏதாவது ஒரு திநத்தில் இவைகளையுங்கூடச் சாப்பிடாமல் சுத்த உபவாஸமாக இருப்பது. இது மநு ஸ்ம்ருதி 11-ம் அத்யாயத்திலும் போதாயந ஸ்ம்ருதியிலும் சொல்லப்பட்டிருக்கிறது.

ப்ராஜாபத்ய க்ருச்ரமாவது: மூன்று நாள் ராத்ரி காலத்தில் மாத்ரம் ஒருவேளை சாப்பிடுவது; பிறகு மூன்று நாள் பகலில் மாத்ரம் ஒருவேளை சாப்பிடுவது; பிறகு மூன்றுநாள் யாராவது தாங்களாகக் கொண்டு வந்து கொடுத்தால் அந்த ஆஹாரத்தை ஒருவேளை சாப்பிடுவது; பிறகு மூன்று நாள் பட்டினியாகவே இருப்பது. இந்த ப்ராஜாபத்ய க்ருச்ரத்தை க்ஷத்ரியன் செய்யவேண்டும். இந்த க்ருச்ரத்தில்

பாதியை [அதாவது : ஆறு திநங்களில் ஷ உபவாஸங்களை] வைஶ்யன் அநுஷ்டிக்க வேண்டும். நான்காவது வர்ணத்தார்கள் ஷ க்ருச்ரத்தில் கால் பாகத்தை [அதாவது: மூன்று திநங்களில் ஷ வ்ரதத்தை] அநுஷ்டிக்க வேண்டும்.

“ வ்ணாலெஙெ ஸஹ ஸம்வகெ ரஸோஸாய ஜெவ வா |
ஶொசஷுயாவகாஹாரொ ஶஸாயெ ந விஶுக்ஷுதி ||”

[ப்ராம்ஹணன் சண்டாளனோடு ஒரு மாஸம் அல்லது 15 நாள் ஸஹவாஸம் பண்ணினல், பசுவின் மூத்ரத்தினல் சமைத்த சாதத்தை 15 நாள்களுக்கு ஆஹாரமாகச் சாப்பிடவேண்டும்.]

இம்மாதிரியான ஆயிரக்கணக்கான வசநங்கள் தர்ம சாஸ்த்ரங்களில் அந்தந்த ஜாதி விஷயத்தில் விசேஷ ஆசாரங்களை விதிக்கிறபடியினல், கீதை ஐந்தாவது அத்யாயத்தில் ப்ராம்ஹணனையும் சண்டாளனையும் ஸமாநமாகப் பார்க்கச் சொல்லுகிற வாக்யமானது இந்த விசேஷாசாரங்களைப் பாதிக்காது. இதுபோலவே பாரதத்தில்,

“ உஷிராஜிஷெ ணொவவயெ ஸாஹணஸ்வ காஊ தஃ |
ஸஂஸுஶ வரிவயஜு வெஶெ ந க்ஷத்ரியெண வ ||”

என்று ப்ராம்ஹணனை க்ஷத்ரிய வைஶ்யர்கள் தொடலா மென்றும், நான்காவது வர்ணத்தார் தொடக்கூடா தென்றும் சொல்லியிருப்பதாலும்,

“ வ்ணாலஉஶ ந ஸஷ்ர் ஸூஷி தவெயொகயெஃ ”

என்று சண்டாளர்களைப் பார்த்தவர்க்கு ஸூர்யனைப் பார்க்கும்படி விதித்திருப்பதாலும், வ்யாஸ பகவான் ப்ரம்ஹ ஸூத்ரத்தில் [அத்யாயம் 2, பாதம் 3, 47-வதான]

“ கூநுஜ்ஞாவரிஹாரள ஷஹஸம்வஂயாக ஜொதிராஷிவக ”

என்கிற ஸூத்ரத்தில், எல்லா ஜீவாத்மாக்களும் ஒரே மாதிரியாகப் பேதமில்லாம லிருந்தாலும், அந்தந்த ஆத்மாக்களுக்கு ப்ராம்ஹண க்ஷத்ரிய வைஶ்யாதி தேஹங்களுடைய பேதத்தை உத்தேசித்துச் சில மனிதர் சில கார்யங்களைச் செய்யலா மென்றும், சில மனிதர்கள் சில கார்யங்களைச் செய்யக்கூடா தென்றும் விதி நிஷேதங்கள் ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படுகின்றன என்றும் சொல்லி யிருக்கிறார்.

இங்கு ஸ்ரீ பாஷ்யகாரர் ‘சில மனிதர்களைப் பார்க்கலாம், சில மனிதர்களைப் பார்க்கக்கூடாது; சில மனிதர்களைத் தொடலாம், சில மனிதர்களைத் தொடக்கூடாது’ என்றும் ஶாஸ்த்ரங்கள் சொல்லுகிறதற்குக் காரணம் ப்ராம்ஹண க்ஷத்ரிய வைஶ்ய சூத்ராதிகளான சரீர ஸம்பந்தம் தான் என்று வ்யக்தமாக எழுதியிருப்பதையும் புத்திமான்கள் கவனிக்க வேண்டும். [தொடரும்]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[3-ம் அங்கம்]

[ஸ்ரீ. உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A B.L.,
அட்வோகேட், திருச்சி.]

[ஸம்புடம் 2, ஸஞ்சிகை 11, பக்கம் 389-ன் தொடர்ச்சி]

தூதன் :—[தனக்குள்ளே பேசிக்கொள்ளுகிறான்.]

"सुप्तप्रबोधनसमुत्सुकया सुमत्या पत्न्या सहाचरितविश्वहितं विवेकम् ।
जेतुं क एव जगति प्रभवेत्तथापि स्वामी नियोजयति मोह इति स्वयं नः ॥"

தூதன் மோஹனுடைய அநுசரணையினுலும் பலாபலத்தைப் பராமர்சித்து யாருக்கு ஜயம் வருமென்று அறியவல்லவன். புத்தியின் தூக்கம் மோஹன் கார்யம். விவேகனும் ஸுமதியும் மாயா நித்ரையிலிருந்து ஜீவனை எழுப்ப ஆரம்பித்துவிட்டார்கள். ஜீவனுக்கு ப்ரபோத ஸமயம்; விழிப்பு ஸமயம் வந்துவிட்டது.

'𑌅𑌨𑌾𑌦𑌿𑌮𑌾𑌯𑌯𑌾 𑌸𑍁𑌪𑍍𑌤𑍋 𑌯𑌦𑌾 ஜீவ: 𑌪𑍍𑌰𑌬𑍁𑌧𑍍𑌯𑌤𑍇'

என்ற ஶ்ருதியை '𑌸𑍁𑌪𑍍𑌤𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑌨' என்பதால் ஸூசிக்கிறார். விவேகனும் ஸுமதியும் ஜீவமோக்ஷண வ்ரதத்தில் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். 'பத்நியோடுகூடி தீக்ஷிதரான அவரை ஜயிப்பவர் யார்? என ஸ்வாமி உத்தரவை அநுஸரித்து நான் தூது வந்து பேசினேன்'. இப்படி மனதிற்குள் பேசிவிட்டு, விவேகனிடம் '𑌤𑍍𑌯𑌜𑍇𑌦𑍇𑌕𑌂 𑌕𑍁𑌲𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇' என்கிற ந்யாயத்தை அதிக்ரமிக்கலாகாது என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

"𑌤𑍍𑌯𑌜𑍇𑌦𑍇𑌕𑌂 𑌕𑍁𑌲𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌗𑍍𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌕𑍁𑌲𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ।
𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌜𑌨𑌪𑌦𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑍇 𑌆𑌤𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑍇 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂 𑌤𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ॥"

என்பது முழு ஶ்லோகம். மனத்தில் உத்பத்தியாவது:—காமம் க்ரோதம் முதலிய பலபல துர்க்குணங்கள். சாந்தி விவேகம் முதலிய சில நற்குணங்களும் மனத்தின் மக்களே. தோஷங்கள் பல பல; குணங்கள் சிலவே. அநேகர் வாழ்வதா? சிலர் வாழ்வதா? பெருங்குலம் வாழ ஒரிருவரைத் தள்ளலாம். கடைசிப் பாதத்தில் 'ஆத்மாவைக் காப்பாற்ற உலகத்தையே விடலாம்' என்றுளது. ஆத்மாவைக் காப்பாற்ற எத்தனை தோஷங்களை, எத்தனை வினைகளைத் தள்ளினுலென்ன? 'ஆத்மா' என்பதற்குப் பரமாத்மா என்பதும் பொருள். ['𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌾 𑌮𑌯𑌾 𑌲𑌙𑍍𑌕𑌾' '𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌦𑌾𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌰𑌾𑌘𑌵𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌗𑌤𑌃 ।' '𑌤𑍍𑌵𑌾𑌮𑍇𑌵𑍈𑌕𑍇 𑌕𑍃𑌤𑌧𑌿𑌯𑍋 𑌨𑌮𑌸𑌃'] மோஹ தூதன் த்யஜநத்தை எடுத்து விவேகன் கக்ஷியையே பலப்படுத்துகிறது.

தூதன் போனதும், 'காம க்ரோத லோப மத மாத்ஸர்யாதிகள் திரும்பவும் திரும்பவும் வந்து பிடித்துக்கொள்ளுமே; படும் பாடெல்லாம் வீணாய்விடுமே' என்று ஸுமதி பயப்படுகிறாள். லோபன் அடுத்த அங்கத்தில் வரப்போகிறான். அந்தப் பாத்ரத்தின் ப்ரவேசத்திற்கும் ஸூசநம் கர்ப்பஸந்தியில் பீஜம். காண்பதும் மறைவதும் அதைத் தேடுவதுமாக இருக்கும். அஸ்தமந ஸமயமாகி ஸந்த்யா தேவி வந்து, பிறகு வையமெல்லாம் மையிருள் ஆகும் ஸமயம் ஏற்படுகிறது. காமனும் வஸந்தனும் உடனே அடுத்த அங்கத்தில் வந்து கூத்தாடப் போகிறார்கள். 4, 5 அங்கங்களில் எதிரிகளின் கொம்மாளமே மிகுதி. 6, 7 அங்கங்களில், அவதாரங்களினது ஸந்தாநங்களாலும் திவ்ய ஸ்தாநாந்வேஷண யாத்ராதிகளாலும் சுப ஸம்ஸ்காரங்கள் தேடி ஸம்பாதிக்கப்படுகின்றன. பிறகு 8-ம் அங்கத்தில் இரண்டு ஸைந்யங்களுக்கும் யுத்தம். 4, 5 அங்கங்களில் மஹாமோஹ படர்கள் ஸந்நாஹம். 6, 7 அங்கங்களில் விவேகர் ஸந்நாஹம். அஸ்தமந ஸமயத்தில் ராஜகுலத்தில் வைதாளிகர் பாடுவார்கள்; வரும் ஸந்த்யை, ராத்ரி, இவற்றை வர்ணிப்பார்கள். தாள ஸஹாய மில்லாமல் விதாளமாய்ப் பாடுவார்கள். ஒரு வைதாளிகன் ஸந்த்யையை வர்ணிக்கிறான்.

"रम्या यामवती पदार्पणपटी रागाब्धिवेलोद्गति
श्चेतोजन्मकदम्बधूलिविततिः शृंगारचूडाजपा ।
संमोहद्विपशोणबिन्दुपटली संध्या जरीजृम्भते
प्रत्यग्दिग्वनितापयोधरतटी काश्मीरपङ्कद्युतिः ॥"

ஸந்த்யையின் வர்ணநம் ஶ்ருங்கார மயம். வரப்போவதற்கு அநுகுணம். அநூசாநரான வைதிகருக்கு ஜபகாலம். காமிகளுக்குக் காம விஜ்ரும்பண காலம். காமுகிகள் அபிஸரணம் செய்யத் தொடங்குவரென்பர். திருடர்கள் ராத்ரி யிருட்டை விரும்புவர். ஸந்த்யாதேவி மிக அழகாய் விளங்குகிறாள். ஒரே காமமாய்த் தோன்றுகிறது. காமத்திற்கு உத்தீபநமாக விருக்கிறாள். ராத்ரிக்கு யாமவதீ என்று பெயர். ராத்ரி என்னும் காமவர்த்தநீ தேவி வரப்போகிறாள். அந்தத் தேவி நடந்து வருவதற்குச் சிவந்த நடை பாவாடைபோல ஸந்த்யை விளங்குகிறாள். ராக ஸமுத்ரத்தின் அலைகள்போல் ஸந்த்யா ராகம் பெருகுகிறது. மந்மத னென்னும் கதம்ப மரத்தின் சிவந்த புஷ்பங்களின் தூளிப் பரப்புப்போல விருக்கிறது. ஶ்ருங்கார மென்னும் தேவன் சிரஸ்ஸில் சிவந்த ஜபா புஷ்பாலங்காரம் போலுளது. மோஹ மென்னும் மதயானையின் தேஹத்தில் சிவந்த புள்ளிகள் நிரம்புவதுபோல் இருக்கிறது. மேற்குத் திக்கெனும் பெண்ணின் விசாலமான தனதடத்தில் காஶ்மீரக் குங்குமப்பூக் குழம்பின் பூச்சுப்போலும் இருக்கிறது. 'ப்ரத்யக்' என்பதற்கு 'மேற்கு' என்றும், 'இந்த்ரியங்களுக்கு விஷயமாகாமல் உள்நோக்கிய மனதாலேயே பார்க்கக்கூடிய ஆத்மாவென்னும் உட்பொருள்' என்றும் பொருள். 'ப்ரத்யக்திக்வநிதா' ஆத்மா வென்னும் உட்பொருளைக்குறித்து உள்நோக்

கிய மதி பஹிர்முகமாகி ஶ்ருங்காரப் பூச்சடைகிற தென்றும் த்வநி. இந்த ஶ்லோகங்களில் காமனின் கபடோபாயம் காட்டப்படுவதால், 'ஸமுத்தாஹரணம்' என்னும் கர்ப்பஸந்தியின் முதலாவது அங்கத்தின் ஸூசநம். மேலிரண்டு அங்கங்களில் அதுபோன்றதின் தொடர்ச்சி; 'கபடோபாயக்லுப்தம்' என்று லக்ஷணம். மற்றொருவன் ராத்ரியினிருள் பரவுதலை வர்ணிக்கிறான்.

> " दिनाधिपविनाकृतिव्यसनखिन्नसंध्यावधू-
> विधूतकबरीभरप्रसरकौतुकापादकम् ।
> विश्रृंखलकलिन्दजाजलतरंगभंगावली-
> मलीयसमिदं तमो जगदशेषमाचूषति ॥"

ஸூர்யன் ஸந்த்யா தேவியின் பதி. அவளோடு மிக்க ராகத்தோடு உதயமானான். பகல் முடிவிலும் அவளோடுகூடி ஒரே ராகக் கடலாயிருந்தது. அவளைவிட்டுப் பிரிவு வந்ததும், அந்த விரஹ வ்யஸநம் பொறுக்கமாட்டாமல் விரஹிணி தசைக்குத் தக்கபடி தன் கருங்கூந்தலை பவிழ்த்துப் பரப்புவதால் ஆகாயமெங்கும் இருள் பரவுகிறதோ எனத் தோன்றுகிறது. பரவும் இருளே ஸந்த்யாதேவியின் விப்ரலம்ப ஶ்ருங்கார மயமோ எனக் காண்கிறது. அல்லது யமுனையின் கருந்திரைகளின் அலைகள் வெள்ளமிட்டோடி வருகிறதோ எனவும் இரவிருளின் பரவுதல் காண்கிறது. 'காஷ்மீரவிகாய' 'யமுநா ஸாக்ஷிகயளவநம் யாவாநம்' க்ருஷ்ணராக மயமானவள். சந்த்ரோதயம் வந்து சந்த்ரிகை வீசுவதை அடுத்த அங்கத்தில் வர்ணிக்கப்போகிறார். இவர்களெல்லாம் ரஜநீசரர். அஜ்ஞாந இருளில் கொட்ட மடிப்பவர். 'விந்நா' என்று பிரிந்த நாயகிக்குப் பெயர்.

விவேகர் :—ஞாந ஸூர்யன் சற்று மறைந்ததும் ப்ராசீ திக்கின் முகத்தை இருள் மூடி மறைக்கிறது. மதுபாநாதிகளால் மயங்கச் செய்து மஹா பராக்ரமத்துடன் ரதிபதியான காமன் பலவித அபநீதிகளைச் செய்துகொண்டு உலகத்தையே ஆக்ரமிக்கிறான். முக ஸந்தியில் ஆரம்பத்தில் கிளம்பின கார்யபீஜத்தை மூடி மறையச் செய்கிறான்.

> " अश्रान्तसन्ततिभिराभरणप्रकाशैराम्रेडयन्त्य इव मंगलदीपभासः ।
> अन्तःपुरं तिलकयन्ति समं समन्तादारात्रिकं मृगदृशो नियमं विधातुम् ॥"

அஸ்தமந ஸந்த்யையைக் காமுகர்கள் நோக்கும் முறை வேறு. ஸாத்விகருக்கு ஸந்த்யை ஸத்வோத்தரமான ஜப காலம். நியமத்துடன் பகவானை த்யாநம் செய்வதற்கேற்ற காலம். வ்ரத நியம காலம். உத்தம ஸ்த்ரீகள் திவ்யாலங்கார பூஷிதராய்ப் பல தீபங்களோடுகூட தீப மங்களாரத்தி எடுப்பார்கள். அவர்கள் ஆபரண ரத்நங்களே ரத்ந தீபங்கள் போன்றவை. சுபமான மதிகள் உள்ளே உள்ளத்தி லேற்றிவைக்கும் ஞாநதீபங்கள் ஜ்வலிக்கின்றன. ஸந்த்யா ஜபாதி நியமங்களுக்காக மங்களதீபங்கள்,

மதிக்கு ஆபரணம் காயத்ரயஷ்டாக்ஷராதி மநுக்கள்; ருக்களை ப்ரசோத நம் செய்யும் மந்த்ரங்கள். ஞாந ஸூர்யனுக்கு அஸ்தமந மில்லை; இரவி லும் ப்ரகாசிப்பவன். ஸூர்யனுடைய தேஜஸ்ஸூ திநாந்தத்தில் அக்னி தீப ஜ்வாலைகளில் வைக்கப்படு மென்பர். 'ஸூர்யாயநம:' ஜபத்தில் ஆம் ரேடநம் ஆவ்ருத்தி புநருக்தமாகச் செய்கின்றன. மந்த்ரங்களை ஒரு தரம் இன்புறப் படித்தாலே போதும். இரண்டாந்தரம் ஜபிப்பது புநருக்தமே 'வள நஃவ ந்ரும் நிவாரயநு'. ஒருதர முச்சரிக்க வாய் திறக்கும் போதே மோக்ஷ த்வாரகக் கதவு திறந்தாயிருக்குமென்பர். அந்தப்புரம் என்பது சுத்தாந்தத்தை. சுத்தாந்தம் சுத்தமான ஹ்ருதயம். நவத்வாரமான புரம் தேஹம் ப்ரஹ்மபுரம்; அதனுள் ஹ்ருதயமெனும் பரம வ்யோம தேஹத்தில் அந்தர்ஹ்ருதயத்தில் ஞான தீபத்தை ஏற்றும் மங்களம்.

நான் ஸந்த்யா கால நியமங்களை யநுஷ்டித்துப் பரமப்ரத்யக்கான பரப்ரஹ்ம ப்ரவணமான மநஸ்ஸூடைய ஜீவனைக் காக்கிறேன். ஸூமதி! நீயும் சாந்தி முதலிய அந்தரங்க ஸகிகள் சூழ மங்களாசரண ஸ்தாந மான உப்பரிகையிலே என்வரவை எதிர்பார்த்திரு. கீதை நிகம ஸௌத தீபசரீ; யோகாரோஹத்திற்கு ஸப்த பூமிகைகளென்பர். மேலும் மேலும் ஏழு மாடிகள். பகவானே யோக நித்ரா காலத்தில் பர்யங்கமாகப் போகிறான். [தொடரும்]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஸூபாநு தைமீ

1உ	வெள்ளிக்கிழமை	—	பொங்கல் பண்டிகை; உத்தராயண புண்யகாலம், மகரரவி 17-44, சாப மகர க்ருஷ்ண சதுர்த்தி திதி.
4உ	திங்கட்கிழமை	—	ஸ்ரீ கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்.
9உ	சனிக்கிழமை	—	ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி வ்ரதம்.
12உ	செவ்வாய்க்கிழமை	—	ப்ரக்ருத 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரம்; அமாவாஸ்யை.
15உ	வெள்ளிக்கிழமை	—	த்ருதியை - சதுர்த்தி திதி த்வயம்.
19உ	செவ்வாய்க்கிழமை	—	ரத ஸப்தமி.
23உ	சனிக்கிழமை	—	ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி வ்ரதம்.
26உ	செவ்வாய்க்கிழமை	—	தைப் பூசம்: எம்பார் திருநக்ஷத்ரம்.
27உ	புதன்கிழமை	—	ப்ரதமை திதி.
28உ	வியாழக்கிழமை	—	த்விதீயை திதி; திருமழிசைப்பிரான் திருநக்ஷத்ரம்.
29உ	வெள்ளிக்கிழமை	—	அதிதி.
30உ	சனிக்கிழமை	—	கும்பரவி 45-0, மகர க்ருஷ்ண த்ருதியை திதி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் விஷயமான

அடைக்கலப்பத்து

[வேதாந்த சிரோமணி நெடுந்தெரு. ஸ்ரீ. உப. ரா. பத்மநாபாசார்யர் இயற்றிய பதவுரை விசேஷ உரைகளுடன்]

[ஸம்புடம் 2 : ஸஞ்சிகை 12 : பக்கம் 432-ன் தொடர்ச்சி]

8-ம் பாசுரத்தின் அவதாரிகை :—ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் தன் திருவடியில் கருடாழ்வானோடும் திருமுடியில் அனந்தாழ்வானோடும் அர்ச்சாவதாரம் செய்து யாவர்க்கும் ஸேவை தந்தருளுவதுபோலவே, தன் ஹ்ருதயத்தில் ஹார்த்த ரூபியாயும் ஸேவை தந்தருளுகிறான் என்று இப்பாசுரத்தில் அருளிச்செய்கிறார்.

8. அஞ்சிறைசே ரணிபறவை யணைந்திட்ட வடியுடையான்
அஞ்சிறைசேர் மணியனந்த னாடியிடு மணிமுடியான்
அஞ்சுருவ வவுணனுட லஞ்சாறாய்ப் பிளந்திட்ட
நெஞ்சுருவ னெம்பெருமா னெமியேனுட் கலந்தானே.

பதவுரை :—அம் சிறை சேர் அணி பறவை - அழகான சிறகுகளை யுடையவனும் அழகான மூர்த்தியை யுடையவனுமான கருடாழ்வானாலே, அணைந்திட்ட - ஸம்பந்திக்கப்பட்ட, அடி உடையான் - திருவடிகளை உடைத்தானவனும், அம் சிறை சேர் மணி அனந்தன் ஆடியிடும் மணி முடியான் - அழகான தலையிலிருக்கும் நாகரத்நங்களுடன் விளங்கும் அநந்தாழ்வான் குடையாகப் பின்புறத்தில் ஆடிக்கொண்டிருக்கும்படியான ரத்ந கிரீடத்தை உடையவனும், அஞ்சுருவ அவுணன் உடல் அஞ்சாறாய் பிளந்திட்ட - கண்டவர் கலங்கும்படியான ரூபத்தை யுடைய ஹிரண்யாஸுரனுடைய சரீரத்தைச் சிந்நபிந்நமாகப் பிளந்தவனும், * நெஞ்சு உருவன் - ['மநோமய:' என்று உபநிஷத்துக்களில்] யோக சுத்தமான மநஸ்ஸால் அறியத்தகுந்தவனாகச் சொல்லப்பட்டவனும், ["நெஞ்சினால் நினைப்பான் எவன் அவனாகும் நீள்கடல்வண்ணனே" என்கிறபடியே ஆஶ்ரிதர்கள் நினைத்தவண்ணம் ஸேவை தந்தருளும்படியான ஸௌலப்யத்தை உடையவனும் இருக்கும்] எம்பெருமான் - ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன், எமியேனுள் கலந்தான் - மிகவும் தாழ்ந்தவனை என் ஹ்ருதயத்தினுள் மறுபடி மறவாதபடி ஸேவை தந்தருளினான்.

கருத்து :—உலகத்தில் ஸஞ்சாரம் செய்யப் புறப்படுபவர்கள் தம்தம் வாஹநத்தில் ஏறிக்கொண்டு குடையும் கையுமாகப் புறப்படுவதுபோல், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் இவ்வுலகத்தில் தன் ப்ரஜைகளைக் காப்பாற்றுவதற்காக ஸஞ்சாரம் செய்யும் திருவுள்ளத்துடன் திருவடிகளில் தன் வாஹநமான கருடாழ்வானோடும், திருமுடியில் ஆதிசேஷனுடனும் சிங்கவேழ் குன்றம் என்னும் அஹோபிலத்தில் அர்ச்சாவதாரம் செய்தருளி, ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் முதலான மஹான்களால் ஆராதிக்கப்பட்டு வரும் தன்னைப் பக்தியுடன் த்யாநிப்பவர்களின் நெஞ்சை விட்டகலாமல் அங்கே நித்யவாஸம் செய்துகொண்டு அவர்களுக்கு ஸகல புருஷார்த்தங்களையும் தந்தருள்வன் என்பதாம்.

9-ம் பாசுரத்தின் அவதாரிகை :—கீழ்ப் பாசுரங்களில் சொன்ன அர்த்தங்கள் யாவும் வேதாந்தங்களிலும் அவற்றின் உபப்ரும்ஹணங்களான விஷ்ணு புராணாதிகளிலும் சொல்லப்பட்டவைகள் என்று இதில் அருளிச்செய்கிறார்.

9. ஆறுமவன் பயனுமவ னனைத்துலகு மவனேயாம்
நாறுதுழாய் நரசிங்கன் நல்லமறை யுளமிதுவே
கூறுமதி மதிசேருங் குணமுடைய வெண்மதியோர்
கூறுகின்றா ரிப்படியே குணமிதுவே வேதியர்க்கே.

---

* 'நஞ்சுருவன்' என்றும் பாடம். அப்போது, 'ஆஶ்ரித விரோதிகளுக்குக் கொடிய காலகூட விஷம்போல் நாசகனையும்' என்பது பொருள்.

பதவுரை :—நாறு துழாய் நரசிங்கன் - திவ்ய பரிமளத்துடன் கூடிய திருத் துழாய் மாலையாலே அலங்க்ருதனாகி விளங்கும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் எவனோ, ஆறும் அவன் - அவன்தான் உபாயம், பயனும் அவன் - அவன்தான் உபேயம், அனைத்து உலகும் அவனேயாம் - அவனேதான் ஸமஸ்த வஸ்துக்களிலும் பரம சரீரியாய் வ்யாபித்திருப்பவன், இதுவே - என்னும் இவ்வர்த்தத்தையே, நல்ல மறை உளம் - ஸர்வ ஹிதத்தையும் தெரிவிக்க வந்த வேதாந்த தாத்பர்யமானது, கூறும் - தெரிவிக்கிறது; அதி மதி சேரும் குணமுடைய வெண்மதியோர் - அதீந்திரியார்த்தங்களையும் அறியத் தகுந்த அறிவை உண்டாக்கும் யோகம் என்னும் தன்மை வாய்ந்த சுத்தமதிகளான பராசராதி மஹர்ஷிகளும், இப்படியே - உபாயமும் உபேயமும் ஸர்வாந்தராத்மாவும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனே என்றே, கூறுகின்றார் - [விஷ்ணு புராணாதிகளில்] சொல்லுகிறார்கள்; இதுவே - இப்படியறிவதே, வேதியர்க்கு - வைதிகர்களுக்கு, குணம் - நன்மையாகும்.

கருத்து :—ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனே ஸமஸ்த சேதநாசேதநங்களுக்கும் அந்தராத்மா என்றும் ப்ராப்யன் என்றும் ப்ராபகன் என்றும் கீழ்ப் பாசுரங்களில் அருளிச்செய்த அர்த்தமே எல்லா வேதங்களினுடையவும் வேதோபப்ரும்ஹணங்களான விஷ்ணு புராணாதிகளுடையவும் பரம தாத்பர்யமாகையாலே, ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை அவ்விதமே த்யானித்து அவன் திருவடிகளில் சரணம் புகுவதே வைதிகோத்தமர்களுக்கு ஸகல க்ஷேமஸாதநம் என்பதாம்.

10-ம் பாசுரத்தின் அவதாரிகை :—இப்ப்ரபந்தமானது ஸதாசார்யனுடைய கடாக்ஷ பலத்தாலே செய்யப்பட்டது என்று இதில் அருளிச்செய்கிறார்.

10. பத்துருவா யுலகளித்த பரமனுரு வொன்பதையும்
பத்துருவாய்ப் பணிந்துநின்ற பரமகுரு தனியருளால்
பத்துருவாம் நரசிங்கர் பதக்கமலம் பற்றுமுறை
பத்துருவாம் பாட்டுரைத்துப் பரமபதம் பணிந்தேனே.

பதவுரை :—பத்து உருவாய் உலகு அளித்த - மத்ஸ்ய கூர்மாதி ரூபமான பத்து அவதாரங்கள் செய்து உலகத்தைக் காத்தருளினவனை, பரமன் - ஸர்வோத்தமனை ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய, உரு ஒன்பதையும் - *ஜ்வாலா ந்ருஸிம்ஹன் முதலான மூர்த்திகள் ஒன்பதையும், பத்து உருவாய் பணிந்து நின்ற பரமகுரு தனி அருளால் - 'பக்தியே ரூபமெடுத்து வந்ததோ' என்று சொல்லும்படி மிக உருக்கத்துடன் வணங்கி நிற்கும் ஸ்வபாவரான குருத்தமருடைய (ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் என்னும் அழகிய சிங்கருடைய உயர்ந்த க்ருபையால். இதற்கு, உரைத்து என்பதோடந்வயம்] பத்து உருவாம் நரசிங்கர் - பக்தி ஒன்றுக்கே ஸேவை தந்தருளும் திருவுருவத்தை யுடைய ந்ருஸிம்ஹனுடைய, பதம் கமலம் - தாமரைபோன்ற திருவடிகளை, பற்றும் முறை - சரணமாக வரிக்கும் வழியைத் தெரிவிக்குமதான, பத்து உருவாம் பாட்டு - பத்து என்னும் எண்ணிக்கையுடன் கூடிய பாட்டுக்களை, உரைத்து - சொல்லி, பரமபதம் - பரமப்ராப்யனை லக்ஷ்மீந்ருஸிம்ஹனை, பணிந்தேன் - வணங்கினேன் - [சரண்புகுந்தேன் என்றபடி] [ஏ - அசை]

கருத்து :—ஜ்வாலா ந்ருஸிம்ஹன் முதலான ஒன்பது மூர்த்திகளையும் ஸேவிக்க வேணும் என்கிற அவாவினால் தெய்வமல்லால் செல்லவொண்ணாச் சிங்கவேழ்குன்றத்துக்கு எழுந்தருளி, அம்மூர்த்திகளைப் பரமபக்தியுடன் வணங்கி மங்களாசாஸநம் செய்தருளிய திருக்குறுங்குடி அழகியசிங்கருடைய க்ருபையால் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய திருவடிகளை சரண்பற்றும் முறையைத் தெரிந்துகொண்டு அம்முறையை இப்ப்ரபந்தரூபமாக வெளியிட்டிருப்பதால், இப்ப்ரபந்தமானது ஸத்ஸம்ப்ரதாயாகதமான அர்த்தத்தைத் தெரிவிப்பதாகையால் இதுவே ஸர்வருக்கும் உபஜீவ்யம் என்பது கருத்து.

11-ம் பாசுரத்தின் அவதாரிகை :—இந்த ப்ரபந்தத்தை அநுஸந்திப்பவர்களுக்கு ஏற்படும் மஹாபலத்தை இதில் அருளிச்செய்து க்ரந்தத்தைத் தலைக்கட்டுகிறார்.

*மேற்படி ஒன்பது மூர்த்திகளின் திருநாமங்களையும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸம்புடம் 1, ஸஞ்சிகை 8, பக்கம் 278-ல் காண்க.

11. அனைத்துலகும் வாழவந்த வாதிநர சிங்கனடி
தினைத்தினையு மறவாத சிந்தையுள்ள சடகோபன்
தனத்துறையு முடையவரும் தாங்குமுரை மாமுனிவன்
மனத்துவைப்பா ரீரைந்தும் மன்வாழ்வா ரிவ்வுலகே.

பதவுரை :—அனைத்து உலகும் வாழ வந்த ஆதி நரசிங்கன் அடி-ஸமஸ்தமான ப்ராணிகளும் க்ஷேமத்தை அடையவேண்டியதற்காக அவதரித்தவனும் ஜகத் காரண வஸ்துவுமான ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய திருவடிகளை, தினைத்தினையும் மறவாத சிந்தையுள்ள சடகோபன் தனத்து - ஒருக்ஷணமும் விடாமல் த்யானிக்கும் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய ஹ்ருதய புண்டரீகத்தில், உறையும் - நித்யவாஸம் செய்பவரான, உடையவரும் - ராமாநுஜனையும், [உம் என்கிற சகாரத்தாலே மேலே சொன்ன சடகோபனையும்], தாங்கும் உரை மாமுனிவன் - தரிப்பதான சொல்லை [ஸ்ரீ சடகோபராமாநுஜ யதீந்த்ரன் என்கிற சொல்லைத்] திருநாமமாகவுடைய ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் [அருளிச்செய்ததான], ஈரைந்தும் - பத்துப் பாட்டுக்களையும், மனத்து வைப்பார் - மனத்தில் தரிக்கும்படி உபஸ்திதி செய்தவர்கள், இவ்வுலகே - இடையூறுகள் நிறைந்ததான இந்த ஸம்ஸார தசையிலேயும், மன் வாழ்வார் - அழிவில்லாமல் ஸ்திரமான வாழ்வுபெறுவர் [இப்ப்ரபந்தத்தை அநுஸந்திப்பவர்கள். "ஈதத் ப்ரஹ்ம ஸம்பத்யதே" என்கிறபடி இங்கும் பரப்ருஹ்யாநுபவத்துடன் வாழ்ந்திருப்பர் என்றபடி].

கருத்து :—ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய பரமாநுக்ரஹ பாத்ரமான ஸ்ரீமதாதி வண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடையவும் அவரால் எப்பொழுதும் வணங்கப் பட்ட பகவத்ராமாநுஜனுடையவும் திருநாமங்களை தாஸ்யநாமமாக வஹிக்கும், ஸ்ரீ சடகோபராமாநுஜ யதீந்த்ரமஹாதேசிகன் என்னும் மஹானால் இப்ரபந்தமானது அருளிச்செய்யப்பட்டதாகையால் வக்த்ரு வைலக்ஷண்யம் முதலான குணங்களுடன் விளங்கும் இப்ப்ரபந்தத்தை அநுஸந்திப்பவர்கள் இந்த ஸம்ஸார தசையிலேயும் பூர்ணமான ப்ருஹ்மாநந்தாநுபவம் பெற்று வாழ்வர் என்பதாம்.

லக்ஷ்மீந்ருஸிம்ஹ மங்கோபய தீந்த்ர திவ்யத்ருஷ்ட்யாத்வவேதகமிரோ -
ணி வக்த்ராஹ: | ஶ்ரீவத்ஸ வம்ஶோ ந்ருஹரேர் மூர்த்தோ
மாயாவஶாய ஶிதி ஸாய மேதைஹ்யவாதீஶ ||

ஸ்வாஹம் நிஹீ நமதிராயதிக: ஸ்வபஜ்யஶ்ரீஹாஷ்யஸ்ய தீக்ஷ்யம
வசிவமமாமசிக்ஷத ஸசிக்த்தி: | தஸாநுஷீயவிவ்ய திக்ஷியமாயமாவாவாம்
ஸ்வஶ்ரூ தயாவி வஹந்தாம் ந கிஞ்சந ஹக்த்யா ||

ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ: ப்ரீயதாம் |

இந்த அடைக்கலப்பத்தை அருளிச்செய்த ஸ்ரீ அழகியசிங்கரின்
ஆஸ்தாநநிர்வாஹ காலம் கி—பி. 1879—1882

ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் அந்தாதியை அருளிச்செய்த
அழகியசிங்கருடைய ஆஸ்தாந நிர்வாஹ காலம் கி—பி. 1748—1757

---

* ஶ்ரீவத்ஸ வம்ஶாப்தே: மநோ:' என்றும் ஶ்ரீவத்ஸ மநோ: ந்ருஹரே: என்றும் அந்வயம்.

இங்கே " ஈஶ்வரோ வஹ்யதம் ஸமேத்ய: ப்ருணோஹமியெவ ஜெ ஸவேஷ " என்கிற ப்ரமாணம் விவக்ஷிதம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

மண் வியந்த மடமை

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசாரியார், M A., L.T. வித்வான், திருவையாறு]

'ஸ்ரீ காந்தா! ஸ்ரீ காந்தா!!' ஓர் சிறு பாலனது கணீரென்ற இனிய குரல் ஒலிக்கிறது. ஏதும் பதிலைக் காணோம். "வாஸுதேவா! வாஸுதேவா!!' இனிமை பொருந்திய அக்குரல் காடு மலை வனாந்தரங்களி லெல்லாம் அலைமோதிச் சுழன்றது. மறுபடியும் எல்லையற்ற வ்யஸநம் நிறைந்த அக்குரல் ஆகாச வீதியெல்லாம் பரவியது. 'கமலா காந்தா! கமலா காந்தா!' பையனுடைய அந்தராத்மாவின் துக்கத்தையெல்லாம் அந்த ஒலி காட்டிற்று. தங்கமான தேஹ காந்தி. ஒலியுந் துயரும் ஒருங்கு தாண்டவமாடும் கண்கள். வாடி இளைத்த சரீரம். பையன் ஒரு திவ்ய லோகத்து வத்ஸன் போலிருந்தான். "என்ன ஒரு மாத காலமாகக் கூப்பிட்டு வரக் காணோம். தபோதநர்களான மௌத்கல்யர் ஸத்யாநந்தர் வாதாசநர் முதலியோர் சிறிதும் பொய் சொல்லார். ஸ்ரீ ரமாகாந்தன் ஸாகர மத்யத்தில் சயனித்திருக்கிறான் என்று ஒருவர் போலப் பலர் சொல்லக் கேட்டிருக்கிறேனே. இன்னும் ஏன் அத்தயாநிதி வந்திலன்? ஆறு ருதுக்களாய் அலறியும் அவன் வந்தபாடில்லை. ஏன்? இந்த ஜலாசயத்தை இறைத்துவிட்டால் அவன் ஆநந்த நித்ரை என்ன ஆகும்? எழுந்து 'ஆரது இப்படிச் செய்தது' என்று என்னை நாடி வருவா னல்லவா?" என்று சிந்தித்தான் பாலகன். அவன் முகத்தில் துணிவு போராடியது. ஆஶ்ரம பதத்திலிருந்து கடல் நோக்கி நடந்தான்.

மாசி மாஸம் நீலமான வானில் நிறைமதி தன் தண்ணிய கதிராயிரத்தைப் பரப்பிக் குதூஹலித்து எழுந்தான். வானப் பரப்புடன் போட்டி யிடுவதுபோல் பரந்து நின்றது எல்லையற்ற கடல். விருந்தினரைக் கண்ட வள்ளலின் உள்ளம்போல், அந்த நீலக் கருங்கடல் கொந்தளித்துப் பெருந் திரைகளைச் சுருட்டிக் கரைப்புறம் எறிந்து மோதி ஆரவாரித் தாடியது. குளிர்ந்த காற்று வானோங்கு தெங்கின் வளங்கொண்ட சோலைகளை அசைத்து, தாழைகளின் இனிய மணத்தைப் பரப்பி, கரை பரந்த புன்னை மரங்களின் இலைகளூடே ஓர் சல சல சப்தத்தை இயக்கி எழுந்தது. மேல் எல்லை யற்ற நீலவானம். எதிரில் நிகரற்ற கடல். மாசிலாத் தண்மதி. குளிர்ந்த ஶ்ரமஹரமான காற்று. பையனுடைய உத்ஸாஹம் பதின்மடங்காயிற்று. கடற்கரையில் உட்கார்ந்தான். அவன் ஊக்கத்தையே அழிப்பதுபோல் மடார் மடாரென்று ஒரு பெரும் அலை ஸர்ப்பராஜன் சீறி எழுந்து வருவது போல் மடங்கி வந்து, பையனுடைய மென்மை பொருந்திய உடலில் மோதி அவன் முகத்திலும் அறைந்தது. செந்தாமரைக் கரங்களால் சலார் சலாரென்று அவன் நீரை இறைக்க ஆரம்பித்தான். இறைக்கிறான்! இறைக்கிறான்! அலைகள் சுருண்டு சுருண்டு மோதுகின்றன. அவன்

உடலெல்லாங் குளிர்ந்தது. வானில் தனிச் செங்கோல் நடாத்தி அரசு புரியுந் தண் மதியும் இப் பச்சிளங் குழவியின் பாட்டைப் பாரே னென் பான்போல மறைந்தான். கதிரவ னெழுந்தான். கன இருளகன்றது. காலையம் பொழுது மாயிற்று. பையன் நிறுத்தவில்லை. இடையிடையே பெருமூச்சு விட்டுச் சிறிதுநேரம் இளைப்பாறுவான். மறுபடியும் இறைப் பான். 'ஸ்ரிய : பதியைப் பாராமல் அப்பால் அடி எடுத்து வையேன்' என்று பேரன்பு பூண்டவனாய் நின்றான். உதித்தெழுந்த கதிரவனும் இவ்வபூர்வச் சிறுவனை வியந்த வண்ணம் மறைந்தான். கண்ணுக் கெட் டிய வரையில் ஜநம் என்கிற பேச்சே இல்லாத கழி நிலக்காடு. பரந்த வானும் பச்சைப் பசுங் கடலும். சிறுவன் அஞ்சாது செங்கைகொண்டு சீறிவரும் அக்கடலை இறைக்கிறான்.

பழைய நண்பனைப் பார்க்க வரும் பண்புற்றான்போல், பரந்த வானிற் பாரித்தெழுந்தான் பனிமதி. சலார் சலார் என்ற இறைப் பொலியும் அலைகள் அருளிலாது கரையில் மோதி மடங்கு மொலியும் மாறி மாறிக் கேட்டன. குளிர்ந்த தென்னஞ் சோலைகளும் இப்பாலக னது பெரு முயற்சியை ஒப்பினபோலுந் தலை துளுக்கின. இச் சிறுவனை ஊக்குவதுபோலும் எல்லையற்ற கடற் பறவைகள் தங்கள் கூடு நோக்கித் திரும்புங்கால் சப்தித்தன. கலங்காத நெஞ்சங் கொண்ட சிறுவன் மேன்மேலும் உற்சாகமாய் இறைக்கிறான்.

ஈதென்ன ஆச்சர்யம்! கடலின் பேராரவாரம் குறைந்தது. நுரை ததும்பிக் கலங்கிய நீர் ஒதுங்கிக்கொண்டே போகிறது. பையனும் நகர்ந்து நகர்ந்து சென்று இறைக்கிறான். பையன் ஓடுகிறான். ஜலம் ஒதுங்கி ஒதுங்கி மணற் பரப்பாயிற்று. பையனது ஆனந்தக் கூச்சலுக் கெல்லை யில்லை. 'வாஸுதேவா! வனஜாக்ஷா! வாஸுதேவா!' வியர் வைத் துளிகள் சொட்டும் அவன் முகத்தில் நிலவு பால் பொழிவது போல் வீசுகிறது. அவன் கண்களில் கொண்டதை நிறைவேற்றும் ஓர் கொற்ற நோக்கம் தாண்டவ மாடுகிறது.

வானில் பேரிடி இடித்தது. ப்ரம்ஹாண்டமான காள பர்வதம் போன்ற ஓர் மேகம் வானிற் றோன்றியது. மின்னல் மின்னியது. ஓர் இனிய பேரொலி கேட்டது. கோடிக் கணக்கான இனிய ஒலிகள் ஸாம வேதத்தைப் பொழிந்தன. பையன் மெய்ம் மறந்து கேட்டான். தான் தினமும் கானம் செய்யும் பகுதிகள் அவன் காதில் அம்ருத தாரைபோல் விழுந்தன. ஸ்ரிய : பதியின் திவ்ய கீர்த்திகளைக் கானம் பண்ணும் அந்த அத்ருஶ்யமான ஸூரி உலகைக் கைகுவித்து வணங்கினான். பேரிடி மறுபடியும் முழங்கியது. மின்னல் பதினாயிரம் மடங்கு அதிகமாய் மின்னியது. திடீரென இப்பேரொலி நின்றது. வெகு தூரத்திற் கப் பால் இயக்கப்படும் குழலொலி போன்ற ஓர் இன்னொலி மாத்ரம் கேட்டது. பையன் தன் எதிரில் நோக்கினான். மணி பர்வதம் மடங் கிக் கிடந்தாற்போல் ஓர் அத்யாஸ்சர்யமான ஸுந்தர வீரன் படுத்திருந்

தான். கடலெல்லாம் ஓர் நீல ஒளி பரப்பிக் கடந்தான். விஶ்வம் முழுவதும் தேஜோ மயமாக்கிய அந்த நீலச் சுடரில் பாலகன் மூழ்கி நின்றான். தன்னை மறந்தான். எதிரில் நோக்கினான். பணைத்து அழகிய பெருங் கை யொன்றில் தலை வைத்து, ஸர்ப்பராஜன்போல் நீண்ட மற்றோர் கரத்தை மேனி மேல் நீட்டி, பன்மணி யொளிரும் முடியும், நீலமா மேனியும், தாமரைக் கண்களும், வனமாலையும், பீதகவாடையும், திவ்யாபரணங்களும் விளங்க ஓர் ஸௌந்தராங்கன் தூங்குகிறான். அவன் மார்பில் கண்ணைப் பறிக்கும் ஒளிக் கடலில் ஓர் ஒண்டொடியாள் துலங்குகிறாள். பையன் ஆனந்தக் கூச்சலிட்டான். வாயில் வேதகாநம் எழுந்தது. கையைச் சிரமேற் குவித்து ஆடினான். அங்கம் புளகாங்கிதம் ஆயிற்று. வாய் குழறிற்று. 'கண்டேன் கண்டேன் என் கருமாமுகிலைக் கண்டேன்' என்றான். அருகிற் சென்றான். மணி பர்வதம் போன்ற அந்தத் திவ்ய திருமேனியைத் தொட்டான். தன் தாபமெல்லாந் தீரப் பெற்றான். உடலெல்லாம் பொங்கும் ஓர் காதல் உள்ளத்தே கனியக் கண்டான். செய்ய தாமரைக் கண்ணனைக் கண்ணார நோக்கினான். 'என் நீல ஜீமுதமே' என்று கதறினான். சிறிது வெட்கம் கொண்டான். சிறிது பயந்தான். மார்பு படபட வென்றது. தன்னையு மறந்து அந்த நீலாசலத்தின்மேல் எல்லையற்ற அன்பிற் சாய்ந்தான். என்ன உணர்ச்சி! என்ன உணர்ச்சி! என்ன இன்பம்! ஓர் பருத்த கை பாலகனை அணைத்தது. தன் நீலத் திருமேனியுடன் அந்த நிர்மல பாலகனை அந்தத் திவ்ய புருஷன் அணைத்தான். ஆயிரம் வீணைகளின் இனிமை கொண்ட குரலில் "வத்ஸா! உன் உள்ளத்தெழுந்த காதலை நான் இதுகாறும் யாரிடமும் கண்டிலேன். கடலை யிறைத்து என்னை யடைந்துவிடலாம் என்று நீ கொண்ட த்ருட விஶ்வாஸம் என்னையும் இப்ரபஞ்சத்தையும் உருக்கிற்று. வத்ஸா! உனக்கென்ன வேண்டும்?" என்றான். பையன் ஆநந்த பரவசமானான். அத் திவ்ய புருஷனின் காடாலிங்கநத்தின் இன்ப வெள்ளத்தில் மூழ்கிக் குழறிய குரலில் "என் இன்ப வடிவே! இனியதோர் எழிலியே! நீ இங்கே என்னுடன் இருந்து எல்லையற்ற காலம் வாழ்வாயாக" என்றான். வானில் இன்னிசை வெள்ளம் எழுந்தது. பையன் பேரில் மலர்மாரி பொழிந்தது. இந்திராபதி அப்படியே வறிய தரையில் அர்ச்சா வடிவமாய் கிடந்தான். பாலகனும் மாபெரும் பித்தனும் (புண்டரீக மஹர்ஷி) பக்கலிலேயே அர்ச்சா வடிவாய் நின்றுவிட்டான். கடல் கொந்தளித்தது. வான் முழங்கியது. உலகெலாங் குளிர்ந்தது. பல்லூழிகள் சுழன்றன. உலகை மயக்கும் ஒளிகொண்ட திருமேனியும் அள்ளி யுள்ளத்தைப் பறிக்கும் அழகிய சிரிப்பும், பருத்துப் பார்ப்பவர் பித்தேறி நிற்கும் மல்லார்ந்த திண்டோள்களும் கொண்டு திறந்த அவ்வெளியிற் காண்பவர் இரங்குமாறு காயாம்பூவண்ணன் கிடந்தான்.

துவாபர யுகத்தின் முடிவிற் சில மஹர்ஷிகள் ஒரு சிறு ஸந்நிதி யமைத்து எம்பெருமானின் திருமேனியை ரக்ஷித்தனர். கடல் கொந்

தளித்தக்கால் நிறைமதி நாள்தொறும் என்னப்பனுக்குத் திருமஞ்சன முண்டு. வெள்ளிய நுரைகொண்ட நீரை, ஸாகரேந்த்ரன் அவ் வினிய திருமேனியிற் பொழிந்து மங்கல நீராட்டுவான். கரைக்கிடந்த நறு மணம் வீசும் புன்னை தாழை முதலிய மலர்களை, அலைகள் அவன் சரணார விந்தங்களில் அர்ப்பிக்கும். பல வருஷங்களாயின.

மாமல்ல பல்லவன் இந்த மன்மத மன்மதனைக் கண்டான். எல்லை யற்ற ஹரிபக்தி கொண்டான். கடலால் இன்னல் ஏற்படா திருக்குமாறு சற்று ஒதுக்கி ஓர் திவ்யாலய மமைத்து என்னப்பனை அங்கே எழுந்தரு ளச் செய்தான். பொன்னும் மணியும் முத்தும் பூமியும் அர்ப்பணம் செய் தான். கனவில் கமலாகாந்தன் "மன்ன! இனி இவ்வநம் நகராயிற்று. இது கல்ப கோடி காலம் வரையில் உன் பெயரால் மாமல்லபுரம் என்று அழைக்கப்படும். நீயும் இவ்வுலகைப் பல்கால் மாண்டு இறுதியில் என் அழிவிலா உலகுக்கு வருவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினன்.

இத்தலமே ஸ்ரீ திருமங்கையாழ்வார் மங்களாசாஸநம் செய்த திருக்கடன்மல்லையாகும். செங்கற்பட்டிலிருந்து சில க்ரோஶங்களிற் கடற்கரையில் இன்றும் இத்தலம் விளங்குகிறது. திருமாமகளின் காந்த னைக் காணவேண்டுமென்று அன்பு விஞ்சிக் கடலையும் இறைத்து விட்டாற் கண்டுவிடலாமென்று புண்டரீகன் கொண்ட மடமை என்ன மடமை! உலகை வாழ வைக்கும் மடமை! உலகம் புகழும் மடமை! உத்தமர் விரும்பும் மடமை! இப்படிப்பட்ட ஓர் ஆசைதானே பெரியாழ்வாரைப் பல்லாண்டு பாட வைத்தது. பிள்ளையுறங்காவில்லி தாஸரைப் பிச்சுவா கத்தியுடன் நிழல்போல் அரங்கனைப் பின்பற்றச் செய்தது. ஶ்ரிய:பதி ஸர்வ சக்தன் என்பதை மறக்கச் செய்த இந்தப் பேரன்பிற் பிறந்த மடமை மண் வியந்த மடமை யல்லவா! இதனால் மாயிரு ஞாலமே மாட்சி பெற்றதல்லவா!

இவ் வெம்பெருமானைக்கண்ட மாபெரும் பாக்யத்தைப் பரகாலன்,

"பேணாத வலியரக்கர் மெலியவன்றே
பெருவரைத்தோ ளிறநெறித்தன் றவுணர்கோனை
பூணாகம் பிளவெடுத்த போர்வல்லோனைப்
பொருகடலுள் துயிலமர்ந்த புள்ளூர்தியை
ஊணாகப் பேய்முலைநஞ் சுண்டான்தன்னை
உள்ளுவா ருள்ளத்தே உறைகின்றானை
காணாது திரிதருவேன் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடன்மல்லைத் தலசயனத்தே."

என்று பாடுகிறார்.

அடியவர் கோரிக்கைக்காக இப்படி எதுவாயினும் செய்யத் துணியும் அநந்தமான அருள்கொண்ட அச்சுதனுக்குப் பல்லாண்டு பல்லாண்டு என்று ப்ல்லாயிரங்கோடி தடவைகள் சொல்லலா மல்லவா?

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரம்

[ஒரு நாடகம்]

[திருப்பூந்துருத்தி ஸ்ரீ. உப. வ. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், B.A.,]

(ஸம்புடம் 2 : ஸஞ்சிகை 12, பக்கம் 404-ன் தொடர்ச்சி)

காட்சி III

[வைகுண்ட லோகத்தில் எம்பெருமானுடைய திருவுத்யாநவநத்தின் வாயிலில் ஆதிசேஷன் காவல் புரிகின்றார். வாயுதேவன் அவருக்கெதிரில் நிற்கின்றார்.]

சேஷன் :—ஹூம், அதிகம் சொல்லி என்ன பயன்? நித்ய ஸூரிகளும் தேவர்களும் பல்லாயிரக் கணக்கிலிருக்க, அவர்களை யெல்லாம் விட்டுவிட்டு என்னை யொருவனையே இந்தக் காவல் தொழிலுக்கு எம் பெருமான் நியமித்ததிலிருந்தே மற்றெல்லாரையுங் காட்டில் நானே அதிக பலசாலி யென்று விளங்கவில்லையா?

வாயு :—நீ சொல்வது பாதிதான் ஸரி. நீ பலசாலி என்பது உண்மைதான். ஆனால் 'எல்லாரையுங் காட்டில்' என்பதில் தான் ஆக்ஷேபம். 'என்னை யொருவனைத் தவிர்த்த எல்லாரையுங் காட்டில்' என்று வேண்டுமானால் சொல்.

சேஷன் :—உனக்கும் எனக்கும் எந்த விதத்தில் ஒப்பு நோக்குவது? நான் பகவானுக்கு அந்தரங்கன். ஆகையால்தான் உள்ளேயும் வெளியிலும் எப்போதும் பகவானோடு கூடவே இருக்கின்றேன். நீயோ கேவலம் ஒரு ப்ருத்யன் தானே! நீ எப்போதும் வாசற்படியில் நிற்கவேண்டியவன் தானே!

வாயு :—வாசற்படியில் நிற்பதாலேயே ஏற்றத் தாழ்வோ அல்லது பலாபலமோ நிச்சயிக்க முடியுமா? ஒரு பூனை கொஞ்சமும் பயமில்லாது வீட்டுக்குள் ஸஞ்சரிக்கத்தான் செய்கிறது. அதனால் அது வாசலில் நிற்கும் யானை யரசனுக்கு ஒப்பாகுமோ? இதோ பார். உலகத்திலே யுள்ள எல்லா ப்ராணிகளுக்கும் அத்யக்ஷனும் நான் தான். ப்ராணனும் நான்தான். என்னுடைய ப்ரபாவம் உனக்குத் தெரியுமோ? தெரியாததால்தான் இவ்வாறு பேசுகின்றாய். பலம், ஞானம், விஷ்ணு பக்தி, முதலிய எல்லாவற்றாலும் நானே உயர்ந்தவன். ஒரு விதத்திலும் நீ எனக்கு ஸமாநமானவன் அல்ல. அதிகம் பேசாதே. மர்யாதையாக இரு.

சேஷன் :—எம்பெருமானுக்கு அநவரத கைங்கர்யம் செய்து,

"சென்றால் குடையா மிருந்தாற்சிங் காதனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கு
மணையாந் திருமாற் கரவு"

என்று கொண்டாடப்படும் என்னைக் காட்டில் பக்தியில் நீயோ பெரியை! நன்று! நன்று!! பலத்திலும் நான்தான் பெரியவன். இதைப்பற்றிப் பேசிப் பேசி என்ன பயன்? நமது பலா பலத்தை வேண்டுமானல் பரீக்ஷை பண்ணித் தெரிந்து கொள்வோம்.

வாயு :—எனக்கும் ஸம்மதமே. ஆனல் எவ்வாறு பரீக்ஷை பண்ணுவது?

[மெதுவாக எம்பெருமான் அங்குத் தோன்றுகிறார். வாக்குவாதத்தில் மூழ்கியிருந்த இருவரும் முதலில் அவரைக் கவனிக்கவில்லை. அவர் மிகவும் ஸமீபத்தில் வந்தவுடன் திடீரென்று அவரைக் கண்டு இருவரும் நாணித் தலைகுனிந்து ஒதுங்கி நிற்கிறார்கள்.]

எம்பெருமான் :—[வாயுவை நோக்கி] இது என்ன அமளி?

வாயு :—ஐயனே! தேவரீரை ஸேவிப்பதற்காக அடியேன் இங்கு வந்த போது, அநந்தன் எங்கள் இருவருள் யார் பலசாலி என்றொரு வாதத்தைக் கிளப்பினார். அவர், தாம் தான் பலசாலி என்கிறார். அடியேன் 'நான்தான்' என்கிறேன். கடைசியில் இந்த பலா பலத்தைப் பரீக்ஷித்துத் தெரிந்துகொள்ளவேண்டுமென்கிறார் இவர்.

சேஷன் :—ப்ரபோ! ஒன்று செய்யலாம். ஜாம்பூநத நதியின் கரைமேல் மிகவும் கனமான மேரு புத்ரன் என்னும் தேவரீருடைய க்ரீடா சைலம் இருக்கின்றது. நான் அதைச் சுற்றிக் கொள்கிறேன். அதை வாயு தூக்கிவிட்டால், என்னைக் காட்டிலும் வாயுவே பலமுள்ளவர் என்று ஒத்துக்கொள்கிறேன்.

எம்பெருமான் :—[வாயுவை நோக்கி] இது உனக்கு ஸம்மதம் தானே?

வாயு :—ஐயனே! அடியேனுக்கு ஸம்மதம் தான்.

எம்பெருமான் :—ஸரி. அப்படியே செய்யுங்கள். [திரை விழுகிறது]

காட்சி IV

[மேரு புத்ர னென்னும் மலை பகவானுடைய க்ரீடாசைலம். அது வடக்கில் மேருவுக் கருகில் இருக்கிறது; மிகவும் கனமானது; முழுவதும் ஸ்வர்ண மயமானது. அதன் தாழ்வரைகள் ரத்ந மயமானவை. அந்த மலையிருக்குமிடத்தில் வாயுவும் சேஷனும் வந்து நிற்கிறார்கள். இவர்களுடைய பலாபலத்தை நிர்ணயிக்கும்படியான இந்தப் போட்டிப் பந்தயத்தைக் காணவேண்டுமென்னும் ஆவலுடன் ப்ரம்ஹா முதலான தேவர்களும் அங்கு வந்து கூடியிருக்கிறார்கள். சேஷன் தன்னுடைய உடலால் அந்த மலையை நன்ருகச் சுற்றிக்கொண்டு, தமது பணமுடிகளால் மலையின் மேல் பாகத்தையும் நன்ருக அழுத்திக் கொள்கிறார். இவ்வாறு தாம் ஸந்நத்தரான வுடன் வாயுவை நோக்கி 'மலையைத் தூக்கலாம்' என்கிறார்.

வாயுதேவன் மெதுவாகவும் அலக்ஷ்யமாகவும் மலையருகில் வருகின்றார். வந்து இடது கையால் மெதுவாக மலையை அசைக்கிறார். அது அசையவில்லை. இன்னுங் கொஞ்சம் பலமாக அசைக்கிறார். அப்போதும் அது அசையவில்லை. பின்பு தமது சக்தி முழுவதையும் உபயோகித்து அதை அசைக்கிறார். அது கொஞ்சங்கூட அசைந்தே கொடுக்கவில்லை. வாயுவுக்கு வெட்கம் உண்டாகித் தேவர்கள் பக்கம் நோக்குகிறார். லோகபாலகனுகிய வாயுதேவன் தோற்றுப் பரிபவம் அடைவதை ஸஹிக்காத தேவர் கூட்டம் வாயுதேவனுக்கு உதவுகிறது. நான்முகனுகிய ப்ரம்ஹாவும் அவர்களோடு சேர்ந்து வாயுவுக்கு உதவுகிறார். எல்லாருமாகச் சேர்ந்து

மலையை அசைக்கும்போதும் மலை அசையவேயில்லை. தேவர்களெல்லாம் ஆதி சேஷனைப் பலவாறு ஸ்துதிக்கிறார்கள்.]

தேவர்கள் :—[பாடுகிறார்கள்]

ராகம் : தோடி; தாளம் : ஆதி

ஆயிர முடியர வரசே போற்றி!
அஞ்சுடர் மணிமுடி யநந்தா போற்றி!
பாயிர நான்மறை பரமப் பெருமான்
பள்ளித் தலமாம் பணியே போற்றி!
சேயுயர் விசும்பிற் றேவர் வணங்குஞ்
சேடா கதிர்போற் றிகழ்வாய் போற்றி!
தூயநல் லமரர் தலைவ னுகந்த
சூரியர் தலைவ! போற்றி! போற்றி.

[தேவர்களுடைய ஸ்தோத்ரத்தால் ப்ரீதியடைந்த ஆதிசேஷன் தம்முடைய பணாமுடிகளைச் சற்றுத் தூக்கிக்கொண்டு தம்மையும் இலேசாக ஆக்கிக்கொள்கிறார். இந்த ஸமயத்தில் வாயு வேகமாக வீசி க்ரீடா சைலத்தையும் அதைச் சுற்றியிருந்த சேஷனையும் தூக்கிக்கொண்டு பூமியிற் கொண்டுவந்து போடுகிறார்.

சேஷனுடைய பணாமுடியிருந்த ப்ரதேசம் திருவேங்கட மலையோடு பொருந்தியது. அவருடைய உடல் ப்ரதேசம் ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரத்தோடு ஒன்றியது. தேவர்களெல்லாம் ஆச்சர்ய பரவசராகிறார்கள்.] [திரை விழுகிறது]

காட்சி V

[ஸ்ரீ வைகுண்ட லோகம் - கருடன் தனிமையில் உட்கார்ந்து சிந்திக்கிறார்,]

கருடன் :—[தனக்குத் தானே] இதென்ன ஆச்சர்யம்! வைகுண்டத்துக்கே அழகைச் செய்துகொண்டிருந்த நவரத்நமயமான க்ரீடா சைலம் பூமிக்குப் போய்விட்டதே! இப்போது இந்த மலை இல்லாததால் இந்தப் பொன்னகரும் பொலிவிழந்ததாயிருக்கிறது. நாம் அந்த மலையை மறுபடியும் வைகுண்டத்துக்கே கொண்டுவருவோம்.

[கருடன் பறந்து கிளம்புகிறார். அவருடைய சிறகின் காற்றால் உலகமெல்லாம் நடுங்குகிறது. பெரிய பர்வதங்களும் ஆடுகின்றன. கடைசியில் கண்களுக்கு அகப்படாமல் மறைகிறார்.] [திரை விழுகிறது.]

காட்சி VI

[பூமியில் க்ரீடாசைலத்துக்கு அருகிலுள்ள ப்ரதேசம். ஆகாய மார்க்கமாகக் கருடன் பறந்துகொண்டு வருகிறார்.]

கருடன் :—க்ரீடாசைலம் இதோ இருக்கிறது! [ஆகாசத்திலிருந்து கீழே இறங்குகிறார்] இந்த சைலம் இங்கிருப்பதால் இந்த பூமிக்கே எவ்வளவு அழகு உண்டாகிவிட்டது! அது பூமியிலிருந்து ஆகாசத்தை அளாவுவதால் இங்கிருந்து நித்ய விபூதிக்கு ஏறுவதற்கான ஸோபானம் போலல்லவா இருக்கிறது? பொன்னும் மணியும் பொலிந்தோங்கிய இது, பார்மகளுக்குச் சாத்திய மின்னும் மணிமுடிபோலும் தோற்ற மளிக்கின்றது. ஸித்தர்கள் சாரணர்கள் எத்தனை பேர் இங்குத் தவம் புரிகின்றார்கள்! அதோ என்ன ப்ரகாசம்? [உற்று

நோக்குகிறார்] பெருமாளும் பிராட்டியு மல்லவோ ஸஞ்சரிக்கிறார்கள்! ஆஹா! இந்தப் பூமி என்ன பாக்யம் செய்ததோ! [அருகிற் சென்று எம்பெருமானையும் பிராட்டியையும் வணங்குகிறார்.]

பிராட்டி :—ஏது வைநதேயன் விண்ணுலகை விட்டு இங்கு வந்தது?

கருடன் :—அன்னாய்! இந்த க்ரீடா சைல மில்லாது வைகுண்டம் பொலி விழந்திருக்கின்றது. ஆதிசேஷனுடைய பிடிவாதத்தால் இந்த மணி பர்வதம் பூமிக்கு வந்துவிட்டது. அதை இப்போது என்னுடைய பரந்த தோள்களிற் சுமந்து வைகுந்தத்திற் கொண்டுபோய் வைத்து விடுகிறேன். அதற்கு அடியேனுக்கு அநுமதி-தந்தருளவேண்டும்.

எம்பெருமான் :—வைநதேயா! உன்னுடைய பக்திக்கு மெச்சினேன். ஆனால் அதோ பார் ஸ்வாமி புஷ்கரிணிக் கருகில் தோன்றும் விமா நத்தையும் பவநாசினிக் கருகில் ப்ரகாசிக்கும் விமாநங்களையும். நானும் பிராட்டியும் இவ்வாறு விஹாரஞ் செய்யும்படியான இன்பக் காட்சிகள் வைகுந்தத்தி லுண்டோ? அத்துடன் சரணாகதர்களைக் காப்பாற்றவேண்டு மென்று நானும் பிராட்டியும் ஸங்கல்பித்ததன் பயனாக இந்த சைலம் பூமிக்கு வந்ததேயன்றி, கேவலம் சேஷனுக் கும் வாயுவுக்கும் உண்டான போட்டியால் மாத்ரம் வந்ததன்று. ஆகையால் இப்போது இதை நீ வைகுந்தத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டாம்.

கருடன் :—ஐயனே! தேவரீருடைய திருவுள்ளம் அப்படி யிருக்குமாயின் அடியேனுக்குச் செய்ய அடுப்பதென்? நியமித்தருளவேண்டும்.

எம்பெருமான் :—சொல்லுகிறோம். இதோ பார். இந்த க்ரீடாசைலமே இப்போது இரண்டு திவ்ய க்ஷேத்ரங்களாக இருக்கின்றது. இந்த சைலத்தில் ஆதிசேஷனுடைய முடிப்ரதேசம் இருந்த இடமாகிய திருவேங்கடம் சேஷமலையாக இருக்கட்டும். சேஷனுடைய பக்ஷ ப்ரதேசமான அஹோபில க்ஷேத்ரத்தில் நீ ஆவேசித்திரு. உன்னு டைய ஸாந்நித்யத்தால் அது காருடசைலமாக இருக்கட்டும். இந்த க்ரீடாசைலத்துக்கு 'வைகுண்ட வெற்பு' என்றும், 'வேதவெற்பு' என்றும், 'செம்பொன் சேர் வெற்பு' என்றும், 'சிங்கவெற்பு' என்றும் பெயருண்டாகும். சேஷமலையில் நாமே ஸ்ரீநிவாஸனாகவும், காருடமலையில் லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனாகவும் இருந்து விஹாரங்கள் புரிவோம்.

கருடன் :—பாக்யம். எம்பெருமான் நியமநப்படியே யாகட்டும்;

[வணங்குகிறார்.] [திரை விழுகிறது]

காட்சி VII

[ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரம்—சில பத்தர்கள். புருஷர்களும் ஸ்த்ரீகளும் தூரத் திலிருந்து இந்த க்ஷேத்ரத்தை ஸேவிக்கிறார்கள்]

ஒருவர்:—[கைகூப்பிக்கொண்டு] அதோ தெரிகிறதே! அதுதானே அஹோபில க்ஷேத்ரம்?

மற்றொருவர் :—ஆம்! அதுதான் அஹோபிலம். அதன் பெருமைதான் என்னே! [பாடுகிறார்]

'ஆறுமுக வடிவேலனே' என்ற மெட்டு

1. ஒன்ப துருவுடன் தேவர்பெரு மானிங் குகந்துக ளித்திடுவார்—நல் லன்புடன் மங்கைமன் பனுவல்பலகேட் டகத்தினில் மகிழ்ந்திடுவார்.
2. ஆதியி ராகவ னன்புடன் போற்றியே யகமிகக் களித்த தலம்—அது கோதில்நற் றபதர் வேதியர் தேவருங் கொண்டாடிப் போற்றுந் தலம்.
3. சோதித் திருமலை சேட னுருவென்பார் சூழ்கலை வாணரெலாம்—அது வேதவுரு வென்னும் விநதைம கன்கொண்ட வியனுரு வென்றும் சொல்வார்.

அதனுடைய திருநாமத்தின் ப்ரபாவம் எப்படிப்பட்டது தெரியுமா?

4. ஐம்பெரும் பாதக மாயினுந் தீர்த்திடு மௌடதம் மற்றொன் றுண்டோ—எம் பைம்புயல் வண்ணனார் மேவிய மாமலைப் பாவந நாம மல்லால்.

எம்பெருமானுக் குள்ளதுபோலவே இந்த மலைக்கும் ஆயிரந் திருநாமங்க ளுண்டாம்; கேள்.

5. சேயுயர் வானத்துத் தேவரும் போற்றிடுந் தெய்வப்பேர் பற்பலவாம்—ஓர் ஆயிர நாமத்தெம் மண்ணலார் சாருமிவ் வாரணப் பொன்மலைக்கே.
6. ஆரியர் போற்றுவ ராதிய கோபில மாரணப் புள்ளின் மலை—அது வீரிய க்ஷேத்திரம் வேதப்பெ ருமலை விண்ணவர் வெற்பெனவே.
7. சிங்கவேழ் வெற்பென்றும் பைரவன்தலமென்றும் செம்பொன்செய் குன்ற மென்றும்—அது பங்கமி லாதவோ ராயிரம் பேருடன் பாரில் விளங்கிடுமால்.

வாருங்கள் சென்று எம்பெருமானை வணங்குவோம். [செல்கிறார்கள்]

[வேறொரு பக்தர் தமது மனைவியுடன் வருகின்றார்.]

பக்தர் :—[மனைவி வநஜாவைப் பார்த்துப் பாடுகிறார்]

'வள்ளிக் கணவன் பேரை' என்னும் கிளிக் கண்ணி மெட்டு

1. பங்கயத்தோன் சங்கரற்கும் பணியப் பயன் கொடுக்கும்
செங்கமலக் கண்ணனையே—கிளியே! சென்று தொழுவோமடி. (கிளியே)
2. அன்புடனே வந்து தொழும் அடியாரை யாதரிப்பான்
பொன்மலையின் மீதொளிர்வான்—கிளியே! பூமகளார் கேள்வனடி. (கிளியே)
3. மங்கையர்கோன் நற்பனுவல் மகிழ்ந்த பரமனையே
சிங்கத் திருவரையில்—கிளியே! சேவித் துயர்வோமடி. (கிளியே)
4. காராரும் வள்ளல்திருக் காகுத்தன் போற்றி செய்த
ஏரார் திருமலையில்—கிளியே! எம்மானைப் போற்றிடுவோம். (கிளியே)
5. ஆதிசட கோபமுனி ஆரும் பராங்குசனார்
பாதம் பணிவோமடி—கிளியே! பாவங்கள் தீர்ப்போமடி. (கிளியே)
6. வடகலையுந் தென்கலையும் வாழ்ந்திடவே வந்துதித்த
சடகோபன் தாளிணையே—கிளியே! சார்ந்து மகிழ்வோமடி. (கிளியே)

[இருவரும் செல்கிறார்கள்]

எல்லாரும் எம்பெருமான் ஸந்நிதிக்குச் சென்று ஸேவிக்கிறார்கள். எம்பெருமான் ஆநந்தமாகக் காட்சி யளிக்கின்றான். எல்லாரும் அதனைக் கண்டு மகிழ்கிறார்கள். [திரை விழுகிறது]

முற்றிற்று : சுபம்

2/0/21
-600 008.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீஶடகோபராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகாய நம:

"தொல்லை யின்பத் திறுதி"

[ஸ்ரீமதி கோ. கல்யாணி அம்மாள், சைதாப்பேட்டை.]

[திவ்ய ப்ரபந்தத்தில் ஸ்ரீ பெரியாழ்வார் திருமொழி 2-ம் பத்து, 9-ம் திருமொழி "வெண்ணெய் விழுங்கி" எனும் பதிகத்தைப் பெரும்பாலும் தழுவிப் பெண்களும் பேதைகளும் படித்துணருமாறு எளிய பேச்சு நடையில் ஸம்பாஷணை ரூபமாய் எழுதப்பட்டுள்ளது இது. பெண்ணொருத்தி எழுத்தறியாள் எழுது மிந்தப் பிழை பொறுத்தல் கற்றறிந்தோர் கடமையாகும்.]

மதுரவல்லி:—[யசோதையிடம் வந்து] அம்மா! யசோதே! உன் பிள்ளை கண்ணன் இருக்கானோல்யோ, நேத்து எங்காத்துக்கு வந்து, ஒரு கடாரம் வெண்ணெயை வாரி முழுங்கிட்டு—முழுங்கிட்டதும் தவிர—வெறும் பாத்ரத்தைக் கல்லிலே மோதி அதன் சத்தத்தைக் கேட்டுண்டிருக்காண்டி. அப்பா! அப்பா! என்ன விஷமம் பண்றது? ஸஹிக்கப் போகலே. புண்லே புளியிட்டாப்பலே இருக்கு. இத்தனை வயஸுக்கு இதுதான் படிச்சுண்டானோடி. போரும். உன் பிள்ளையைக் கூப்பிட்டுக்கோடி. [இவ்வாறு சொல்லிக்கொண்டே யிருக்கும்போது லலிதா பரபரப்பாய் வருகிறாள்.]

லலிதா:—[மிகுந்த கோபத்துடன்] அம்மாமி! நான் சொல்றேன்னு கோவிச்சுக்காதிங்கோ. எப்படிப்பட்ட பிள்ளையைப் பெத்துண்டீகள். வீட்டிலே ஒன்னு வைக்க ஆசையில்லே. எல்லாத்தையும் கொட்டியிறைச்சுப் பாழ் பண்றது. அடிக்கணும்னாலும் மனஸு வரமாட்டேங்கறது. நேத்தை தினத்திலே கேளுங்கோ. எங்கம்மா பாலைக் கறந்து அடுப்பில் வைச்சுட்டு, அடுத்தாத்துக்கு நெருப்பு வாங்கிண்டு வரப் போயிருந்தா. போராக் குறைக்கு என்னைக் காவலும் வைச்சிருந்தான்னு வைச்சுகுங்கோ. இந்தத் தீம்பன் என்ன பண்ணினான் தெரியுமோ? நான் புழக்கடையிலே போயிருந்த ஸமயம் பார்த்து உள்ளே புகுந்தான். குடத்தின் கீழே குந்தி உட்கார்ந்து ஒரே சாய்ப்பாய் சாய்ச்சுண்டு, ஒரு சொட்டும் கீழே சிந்தாதபடி அப்படியே அத்தனை பாலையும் குடிச்சுட்டுப் போய்ட்டான். போற போக்கிலே அந்தக் குடத்தை உருட்டிட்டும் போய்ட்டான். எங்கம்மா வந்ததும் என்னைக் கொன்னுட்டா. இவனாலே ரொம்ப அடிபட்டுண்டேன். என் உடம்பைப் பாருங்கோ. [அழுதுகொண்டே] இது நியாயந்தானா? கொஞ்சம் பிள்ளையைக் கூப்பிட்டுப் பயமுறுத்தப் படாதா?

5L
Q22ம21;1N4
N44.3.1

யசோதை :—கண்ணு ! இந்த மாதிரி விஷமம் பண்ணப் படா தென்னு எத்தனை தரந் தாண்டா சொல்வேன். வா. நம்மாத்தை விட்டு அசலாத்துக்கு நீ ஏன் போகணும்? அவாளெல்லாம் தூஷிச்சுப் பரிப வப்படுத்தருளே ! காதாலே கேட்கப் படலேயே ! இனி இந்த மாதிரி செய்யாதே. [இப்படி சொல்லிக் கொண்டிருக்கையில்]

ப்ரேமா :—[தன் குழந்தையையும் அழைத்துக்கொண்டு] அடி ! யசோதே ! நேத்தை தினம் பாரு—ஹூம்; இங்கே யாருக்குத் தள்றது?—தினம் ஏதாவது பக்ஷணம் பண்ணிக் கொடேன்னு 4 நாளாய் ப்ராணனை வாங்க றது இது. அதுக்காகப் பால் நெய் சக்கரை இதெல்லாம் வாங்கிண்டு வரச் சொல்லி, இப்படி இப்படி ஒரு 12-உருண்டை உருட்டிப் போட்டி ருந்தேன். அது என்னமா தெரிஞ்சுதோ ஒன் பிள்ளைக்கு. என் பேரனை ஸ்நேகம் பண்ணிண்டு, ஒன்னு கூட வைக்காமே மொத்தத்தை யும் தின்னு ஒழிச்சுட்டுப் போய்ட்டாண்டீ. இல்லே, தின்னத் தான் தின் னுனே. இதுக்கும் 4, 5, கொடுத்துத் தானும் தின்னுனு? இதுக்கு ஒன்னு கூடக் கொடுக்காதே எல்லாத்தையும் தன் வயத்திலே கொட்டி மூடிட் டான். இப்போ இது அழறது. என்னடீ பண்ணுவேன் ? கொஞ்சம் அவனைக் கூப்பிட்டுக் கட்டியாவது போடறது தானேடி.

யசோதை :—கேசவா ! நீ ஏண்டா இப்படி வசவு கேட்டுக்க ணும். உன்னண்டை நேச மில்லாதவாள் ஆத்துக்கு நீ ஏண்டா விளை யாடப் போறே? இனி அசலாத்துக்காராள் ஏதாவது இந்த மாதிரி சொல்லிக் கேக்கமாட்டேண்டா. ஆத்துக்கு வா. வேண பக்ஷணம் பண்ணி வைச்சிருக்கேன். நெய்யிருக்கு. பாலிருக்கு. வெண்ணெயிருக்கு. சாப்பிடேன். [இப்படி சொல்லிக் கொண்டிருக்கும்போது]

மரகதம் :—யசோதே ! எங்க ப்ராணனை வாங்கறத்துக்கூன் னுட்டு, நீ ஒரு பிள்ளையைப் பெத்து வைச்சிண்டிருக்கையே ! அத்தைச் சொல்லு. நேத்தை தினத்திலே ஒன் பிள்ளை பண்ணினத்தைக் கேளு. அடுத்தாத்து அலமேலு நேக்கு சில பக்ஷணங்கள் பண்ணச் சொல்லிக் கொடுத்தா. அதை ரொம்ப நாளாய்ப் பண்ணணம் பண்ணணம்னு நினேச் சுண்டிருந்தேன். ஒழியல்லே. நேத்துத்தான் கொஞ்சம் கொஞ்சம் லட்டு சீடை முறுக்கு எள்ளுருண்டை இதுகளை யெல்லாம் பண்ணி, ஒரு பாத்ரத்திலே வைச்சுக் காத்துக்கூட போகாதே மூடி ஒரிடத்திலே வைச் சிருந்தேன். நான் வைச்சிருந்த இடம் இந்த்ரன் சந்த்ரனுக்குக் கூட தெரி யாது. அதை எப்படியோ ஒன் பிள்ளை கண்டுபிடிச்சிண்டு, மொத்தத் தையும் தின்னுட்டு போய்ட்டான். தவிர, குறைஞ்ச வயத்துக்கு வெண் ணெயும் தேடிண்டிருக்கான். திடீர்னு நான் வந்துட்டேன். காத்தாய்ப் பறந்து வந்துட்டாண்டீ. என் கையிலே ஆப்டா வயத்தெரிச்சல் தீர நாலறை வைச்சு அனுப்பி யிருப்பேன். போ; ஒன் பிள்ளையைக் கொஞ்சம் அடக்கி வை.

யசோதை:—என் கண்ணே! வாடா. இவ்வளவு சொல்றேனே. உன் காதிலே ஏறலையோ? தாய் சொல்லைக் கேட்பது தர்ம மில்லையோ? வாம்மா. அடிபட்டுக்காதே. என்னண்டை வந்துடு. [வஸந்தா கண்ணுங் கண்ணீருமாய் வருகிறாள்]

வஸந்தா:—நான் சொல்றேன்னு மாத்ரம் ரோஷப்படறே; உன் பிள்ளை செய்யறது உனக்குத்தான் பிடிச்சிருக்கு யசோதே! இன்னிக்கு காலம்பர—மணி 8 இருக்கும்—என் வீட்லே இந்த வம்பன் வந்து என்ன செய்தான் தெரியுமா? வீட்டுத் தாவாரத்திலே வந்து ஜாடை பண்ணி என் பெண்ணைக் கூப்டான். அந்த சமத்து உடனே ஓடிவந்தது. இரண்டும் கொல்லைப் பக்கம் போச்சுகள். அப்போ ஒன் பிள்ளை ஏதோ கதையைச் சொல்லிண்டே என் பெண் கைவளையை மெள்ள கழட்டிண்டுட்டான். அப்போதாவது சத்தம் போட்டுத் தெரிவிக்கலாமோல்யோ? ஒன்னும் தெரிவிக்கலே. கொல்லையிலே ஒரு நாவல் பழக்காரி வந்தாள். அவளிடத்திலே இந்தத் தங்க வளையைக் கொடுத்துட்டு, நாவல் பழத்தை வாங்கித் தின்னுண்டிருக்கானும். இவளுக்கும் ஒன்னும் கொடுக்கலே. ஏமாத்திட்டான். குழந்தை கண்ணைப் பிசைஞ்சிண்டு அழுதுண்டு வந்தது. என்னடீன்னு, "கண்ணன் வளையைக் கழட்டிண்டு நாகப்பழம் வாங்கித் தின்னுட்டு ஓடியே போயிட்டாம்மா" என்கிறது. அப்புறம் அவனைக் கண்டு பிடிச்சு 'ஏண்டா?'ன்னு கேக்கறேன். 'நேக்கு ஒன்னுமே தெரியாது'ன்னு சொல்லிட்டு ஓடறான். பார் உன் பிள்ளையின் பவிஷை. அண்டையாத்துவா அசலாத்துவாளை இப்படி அநியாயம் பண்ணுவது தான் வழக்கமோன்னு கேக்கறேன். கூப்பிடடீ உன் பிள்ளையை. [இவ்வாறு வஸந்தாவின் வழக்கைக் கேட்டுக் கொண்டிருந்த மங்களம் ஒன்று சொல்லுகிறாள்]

மங்களம்:—இன்னொன்னு கேட்டையோ? யசோதே! கோடியாத்து கோமளம் சொல்லிண்டிருந்தா. காதிலே பட்டது. முந்தா நாள் மேலத்தெரு மரகதத் தாத்தில் அவ மாமியார் வெடிய 2 நாழிக்கு முன்னே பிடிச்சுத் தயிரைக் குழப்பி வெண்ணெ யெடுத்து, அதை ஒரு கடாரத்தில் பூரிச்சு, கைக்கெட்டாதே ஆகாசத்திலே ஒரு உறியைக் கட்டி அதில் தொங்க விட்டு, கள்ளக் கயிறெல்லாம் போட்டு ஜாக்ரதையாய் வைச்சிட்டுக் குளிக்கிறத்துக்குப் போனாளாம். அப்போ உன் பையன் அங்கே படுத்திண்டு பொய்த் தூக்கமா தூங்கிண்டிருந்தானும். அவ போனதைத் தெரிஞ்சிண்டு எந்திருந்து, தன் தோள் வரைலே கைபோட்டு வாரி முழிங்கிட்டு, அந்த வெண்ணெய்க் கையோடே முன்னிருந்த இடத்திலே படுத்துண்டு நிஜமாய்த் தூங்கறவன்போல் குறட்டை விடறானும். இதுக்குள் குளிக்கப் போன மரகதம் வந்து பார்த்தாள். அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. எப்படி யிருக்கும் நீ தான் சொல்லேன். வயத்திலேயும் வாயிலேயும் அடிச்சுண்டாள். அப்புறம் அவனை வெறுமனே விடலை. அணை கயிறை எடுத்துண்டு,

"துஷ்டப் பயலே! நீதானே செய்தே. உன்னைத் தவிர வேறு யாரடா இவ்வளவு துணிச்சலா செய்வா?" என்னு சொல்லிண்டே வீறி வீறி விட்டுட்டாளாம். அந்த அடியைப் பட்டுண்டு ரண்டாம் பேர்க்குத் யர்தே வீடுவந்து சேர்ந்தானும். ஏண்டீ தலையிலே எழுத்து. விஷமக் காரப் பசங்களை அடக்கித் தாண்டி வைக்கணும். ஆருக்கும் இவ்வளவு வயத்து ஆத்ரம் உதவாது. இப்பவும் பரவாயில்லை. வா; நானும் வரேன். நல்ல புத்தி சொல்லுவோம். [யசோதையும் மரகதமும் வந்து பார்க்கிறுள். கண்ணன் அப்போது வெண்ணெயைத் திருடித் தின்று விட்டுக் கையும் களவுமாய் அகப்படுகிறுன்.]

மரகதம்:—பாரேன் யசோதா! அவா சொல்றத்துக் கென்ன? இவன் செய்யறதுக் கென்ன?

யசோதை:—கண்ணு! ஏண்டா இப்படி பேர் வாங்கருய்? காதாலே கேட்கப்படலேடா! நம்ம வீட்லே எப்படியாவது போறது. அசல் வீட்லே போய் இப்படி விஷமம் பண்ணு அவாள்ளாம் சும்மா இருப்பாளா?

க்ருஷ்ணன்:—நான் எங்கம்மா போறேன்? இங்கேயே தானே இருக்கேன். நோக்கு தெரியாதோ? அவாள்ளாம் என்மேலே வேணும்னு பழிபோடறு. என்மேலே எத்தைச் சொன்னாலும் ஏற்கு மோல்யோ? அவா பேச்சைக் கேக்காதே. திருடவுமில்லை, ஒன்று மில்லை. இப்போதான் அம்மம் சாப்பிட்டு வந்தேன். கையைக் கூட அலம்பலே பாரு.

யசோதா:—நானே உன்னை இப்போ கையும் களவுமாய்ப் பிடிச்சுட் டேனே. அவாள் சொல்றதிலே ஒன்றுகூட தப்பில்லை உனக்குத் தண்டனை கொடுக்காட்டா சரிப்படாது. [இவ்வாறு சொல்லிக்கொண்டே சுற்றும் முற்றும் பார்த்து, ஒரு தாம்பை எடுத்து ஓங்கி அடிக்க வருகிறுள். அப் போது கண்ணன் அடைந்த நிலையைப் பாருங்கள்.]

"முழுதும் வெண்ணெ யளைந்து தொட்டுண்ணும்
    முகிழிளஞ் சிறுத் தாமரைக் கையும்
எழில்கொள் தாம்புகொண் டடிப்பதற் கெள்கு
    நிலையும் வெண்தயிர் தோய்ந்த செவ்வாயும்
அழுகையு மஞ்சி நோக்கு மந்நோக்கும்
    அணிகொள் செஞ்சிறுவாய் நெளிப்பதுவும்
தொழுகையு மிவைகண்ட வசோதை
    தொல்லை யின்பத் திறுதி கண்டாளே."

—பெருமாள் திருமொழி, 7-8.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

OFFICE OF THE REGR.
15 FEB 1944
MADRAS

செய்திகள்

---

(1)

ஸ்ரீநிவாஸ வள்ளல்

இன்பத்தி லிறைஞ்சுதலி லிசையும் பேற்றில்
இகழாத பல்லுறவி லிராக மாற்றில்
தன்பற்றில் வினைவிலக்கிற் றகவோக் கத்தில்
தத்துவத்தை யுணர்த்துதலில் தன்மை யாக்கில்
அன்பர்க்கே யவதரிக்கு மாயனிற்க
அருமறைகள் தமிழ்செய்தான் தாளே கொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும்
தொல்வழியே நல்வழிகள் துணிவார் கட்கே.

* பெருமாள் கோயில் ஸ்ரீரங்கராஜ வீதியிலுள்ள சரணகதி நிலயத்தில் நடைபெற்ற மஹாமஹோபாத்யாய திருப்புட்குழி ஸ்ரீ. உ. வே. க்ருஷ்ணஸ்வாமி தாதாசாரிய ஸ்வாமியின் இரண்டாவது அறுபதாண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தில் 24—10—43 வித்வத் ஸதஸ்ஸில் திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கக் காரியதரிசி ப. ரே. ஸ்ரீ. உப. திருமலை அய்யங்காரால் எழுதியனுப்பப்பட்ட வ்யாஸம் இது.

உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே. கருவிலே திருவுடையவரே உயர்ந்தே பிறந்தாராவார். இவரே புகழொடு தோன்றுபவர். திருமகளோடு வருந் திருமாலே பரன் என்றுணர்ந்து, அவன் பாதாம்புயத்தைப் பற்றுவதே பயன் எனத் தெளிந்து, உள்ளம் உரை செயல் என்ற திரிகரண சுத்தியோடு ஸர்வ சரீரியான திருமகளார் தனிக் கேள்வனை ஒழிவில் காலமெல்லாம் அநுபவிப்பதையே பொழுது போக்காகக் கொண்டு, மெய்யடியார்கள் தம் கூட்டத்துட னிருந்து உலகின்புறச் செய்யும் பெருந்தகையாளரையே பெரியார் எனத் தமிழ் கூறு நல்லுலகு தொன்று தொட்டுப் பாராட்டி வருகின்றது. இவரைப் பெருமையுறச் செய்து, என்றும் புகழுடம்புடன் நிலைபெறுமாறு செய்வது இவர்களிடம் உள்ள அன்பு. பெறுதற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடு உண்டாகிய தொடர்ச்சியினை அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர். உடம்போடு கூடியல்லாமல் அன்பு செய்தல் கூடாமையால், அவ்வன்பு செய்தற் பொருட்டே இத்தொடர்ச்சியுளதாயிற்று. ஆகவே இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்புடைமை என்பது தேற்றம். கல்விக்குப் பயன் இவ் வுடைமை யுளதாதல். ஒருவனுக்குச் சம்பந்தமுடையவரிடத்துச் செய்த அன்பானது, அத்தன்மையினால் பிறரிடத்து விருப்பமுடைமையைத் தரும். அவ்விருப்ப முடைமையானது இவனுக்குப் பகைவரும் நொதுமலரு மில்லையாய், யாவரும் நட்பினரென்று சொல்லப்பெறுகிற அளவிறந்த சிறப்பைத் தரும். பகை நட்பில்லார் நொதுமல ராவார். இவ்வுலகத்து இல்வாழ்க்கைக்க ணின்று இன்பல் நுகர்ந்து, அதன்மேற் றுறக்கத்துச் சென்றெய்தும் பேரின்ப அன்புடையராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயனே. எனவே அன்பு முதலாக அவ்வன்பின் வழியில் நின்ற உடம்பே உயிர் நின்ற உடம்பாகும். அவ்வன் பில்லாதார்க்கு இருப்பனவாய உடம்புகள் எலும்பைத் தோலினால் போர்த்தனவாம். உயிர் நின்ற வுடம்பாகா. 'அன்பின் வழியது உயிர்நிலை' எனவறிந்து, 'பெறுவதெல்லா மிங்கே நாம் பெற்று வாழப்' பாரிப்பவரையே அன்பர் என உலகம் போற்றும். தமக்கென

---

* இது, ஸ்ரீ பந்தல்குடி ஸ்வாமியின் வேண்டுகோளின்பேரில் ப்ரசுரிக்கப்படுகிறது.

வாழாப் பிறர்க் குரியாளரே இவர். ‘அன்பர்க்கே மாயன் அவதரிக்கிறான்’ என்பது அன்பர் குலச் சிங்கனை தூப்புல் வேங்கடநாதன் முழக்கிய சிங்கநாதம். ‘அன்பன் தன்னை அடைந்தவர்கட் கெல்லாம் அன்பன் தென் குருகூர் நம்பிக்கு அன்பனாய மதுரகவி தோன்றக் காட்டுந் தொல்வழியே நல்வழிகள்’ என நானிலத்தில் நன்கு நாட்டி, அவனியை வாழ்வித்த தூப்புல் வள்ளலாரின் திருவடிகளை வாழ்த்தும் அன்பரிற் றலைவராய்த் திகழ்ந்து விளங்குபவரே ஸ்ரீ. உ. வே. வண்பாக்கம் வேங்கட ஸ்ரீநிவாஸய்யங்கார் எனப் பெயரிய உத்தமர். இவரது வண்மையைச் சற்று விளக்குவதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கு.

தமிழுக்குக் கதியாவார் இருவர் என்ப. கஃகான் கற்றோ ரிதயங் களிக்கக் கவிபாடும் கம்ப நாட்டாழ்வானையும், திஃகான் தூப்புல் வள்ளலான **திருவேங்கட** முடையானையும் குறிக்குமெனக் கொள்க. [இதன் விவரணத்தைத் தோத்திரமாலை (திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்க வெளியீடு 7) முகவுரையிற் காண்க.] உத்தமக் கவிகளான இவ்விருவரையும் முறையுடன் போற்றுவதே இத்தமிழ்ச் சங்கத்தின் முழு நோக்கு. இராமாவதாரம் அரங்கேற்றிய பங்குனி உத்திரமான பகற்போதில், ஆண்டு தோறும் கம்பர் திருநாட் கொண்டாட்டம் இச்சங்கத்தாரால் நடத்தப்பெற்று வருவதில், இதனை ஆதியில் ஆரம்பித்து அவைத் தலைமை தாங்கி, இனிது நிறைவேறுமாறு செய்த பேருபகாரம் ஸ்ரீநிவாஸ வள்ளலா ருடையதே. ‘நல்லார் செயுங் கேண்மை நாடோறும் நன்றாகும்’ என்ற முதுமொழியின்படி, அந்நன்னாளிற் றொடங்கியது பிறைபோல வளர்ந்தோங்கி வருவது குறிப்பிடத் தக்கது. இவ்வன்பர் சிகாமணி அன்று முற்றுரையில் ‘இன்று தமிழ் தமிழாயது’ என்ற சூத்திர ரூபமான மங்கள வாக்கியம், என்றும் அன்பர்கள் செவிக் குணவாக இருந்து வருகின்றது. அன்றைத் தொடக்கமே இச்சங்கத்தின் அபிவிருத்திக்கு வித்து என்பதே எம்மனோர் அநுபவம்.

இத்திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத் தலைவரும், முத்தமிழ்த் துறையின் முறைபோகிய உத்தமக் கவியாய் விளங்குபவரும், திருப்பாடியம் முதலான ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயக் கிரந்தங்களை நல்லோரிடம் முறைப்படி காலட்சேபம்செய்து அவ்விரதத்தை வழங்கியவரும், நல்லன்பரும், இச்சங்க வெளியீடான வகுளமாலைப் பத்திராசிரியருமான ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள் எம். ஏ. பி. எல்., அட்வோகேட், பாடிய வேதாந்த தேசிக ரூசல், (சங்க வெளியீடு 6). பிரமாதி வருடம் வைகாசித் திருவிழாவில் கருடஸேவை யன்று, முத்திதரு நகரேழில் முக்கியமாங் கச்சிக்குத் திலதமாய் விளங்கும் அம்பூந் தேனிளஞ் சோலையில் அமர்ந்துள்ள தூப்புல் வள்ளலார் திருவடி வாரத்தில் காணிக்கையாக மேற்கண்ட சுப தினத்தில் தூப்புற் கோமானுக்குப் பேரருளாளப் பெருமான் அளித்த மரியாதைகளுடன் வீற்றிருந்தபோழ்து இடப்பெற்றது. அன்று மாலை 4-மணிக்குச் சின்ன காஞ்சீபுரம் ஸ்ரீரங்கராஜ வீதியில் அமைக்கப் பெற்றுள்ள ஸ்ரீதேசிக தர்சநாஶ்ரமத்தில் ஒரு பேரவை கூட்டி “வேதாந்த தேசிக ரூசல் விளக்கம்” என்ற மகுடமிட்ட விஷயத்தைச் சங்கத் தலைவர், அன்றும் அதனை யடுத்து மூன்று நாட்களிலும் பல திவ்ய தேசங்களிலிருந்து வந்திருந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் இன்புறுமாறு உபந்யாஸஞ் செய்யும்படி செய்வித்து, தான் உடனிருந்து மணிவிளக்காய்த் திகழ்ந்து, அன்னவரை உலகு நன்கறிந்து உவக்கும்படி செய்த உத்தம வுபகாரத்தை யாவரே மறக்கவல்லார்! அன்று தொட்டு வைணவவுலக முற்றும் அவ்வப்போது அழைத்து அன்பரின் அமுதமொழிகளை அருந்தி வருவது அனைவரும் அறிந்ததொன்றே. ஈதொன்றும் நம் வண்பாக்க வள்ளலின் கைவளத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டவல்லது. இதுபோல் பல சந்தர்ப்பங்களை எடுத்து இயம்பலாம். விரிவஞ்சி இதனை மட்டும் உரைத்தனம்.

தூப்புற் குலமணி அருளிச் செய்துள்ள **தயா சதகம்** எனும் வடமொழித் தோத்திரத்தைத் **திருவருண்மாலை** என்ற செய்ய தமிழ் மாலையாக இச்சங்கத்

தலைவர் ஆக்கியிருந்ததை அறிந்த சிரோங்கு வள்ளலாரான இந்த ஸ்ரீ தேசிக தர்சந ரத்ந தீபம் ஸ்ரீமான் வி வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள், அம்மாலைத் திருவரங்கேற்று விழாவைத் திருமயிலைத் திருவேங்கட முடையான் ஸந்நிதியிலும் திவ்ய தம்பதிகள் திருவுள்ள முகக்குமாறு நடத்திவைத்த ஔதார்யம் ஓதியோதி யுணருந்தொறு முணர்ச்சி யுதவும். என்னே அய்யங்கா ரவர்களின் கொடைத்திறன்! அன்று அம்மயிலையில் இச்சங்கத் தலைவர், மஹா வித்துவான் காரியதரிசி முதலியோரை அன்புடன் ஆதரித்த அழகு அழியா வழகே.

மக்களாய்ப் பிறக்கின் புகழிற்குக் காரணமாகிய குணத்தோடு பிறக்கக் கடவர். புகழுண்டாக வாழ்வதற்குக் கல்வி, ஆண்மை, நற்குடிப் பிறப்பு, நல்லொழுக்கம், செல்வம், தீவினைக் கஞ்சுதல், நடுவு நிலைமை, ஈகை முதலிய பல காரணங்கள் உள. இவை ஒருங்கே நிரம்பப் பெற்றவரே நம் ஸ்ரீநிவாஸ வண்ணல்; எவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் குலத்துதித்தவர். ஒழுக்க முடைமை குடிமை என்றபடி இவரது சீரிய வொழுக்கமே இவரை அந்தணச் சிரேட்டர் என அனைவருங் கொண்டாடுதற்கு உரித்தாக்குகிறது. உலகத்தோ டொட்ட ஒழுகலே இவர் கற்ற கல்வி. திருமாலடியார் பாரம்பரையிற் றோன்றி, உலகெங்கும் புகழ் விரிக்கும் நற்குலத்துக் கோர் விளக்காய் நின்று, பரோபகாரமே ஒருரு வெடுத்த தெனப் பேரறிஞர் போற்றத் திகழ்ந்து, தேசிக பக்தி யென்னும் திண்மை பெற்று, அருளுடைமை நலனுறுமாறு தண்ணளி மிகுத்து மிளிரும் நல்லற மூர்த்தியே இப் பெருந்தகையாளர் என்பது உற்ற துரைப்பதே யாகும். சரணாகதி தர்ம நுட்பத்தைச் சால விளக்கிய தூப்புற் குலமணியின் பாதாரவிந்தங்களைத் தனது இதய கமலத்தில் இனிதிருத்தி அருச்சனை புரிந்தவரும் அண்ணலே இவர் என்பதோர் பேருண்மை. இவரது பூசனை மிகவும் புனிதமானது; விலக்ஷணமானது; தேசிகனுக்கு மிகவும் உகப்பைத் தருவது. ஆசார்ய மஹோத்ஸவம் என்பது அவர்கள் அருளிச்செய்த கிரந்தங்களைத் தக்கபடி போற்றி, அவற்றை அறிஞரும் அறிவிலிகளும் கொண்டாடுமாறு செய்து, அவ்வவதார புருஷர்களின் உயரிய நோக்கங்களை உலகறியப் பரவச் செய்து, அனைவரும் இன்புற்று வாழச் செய்வதே என்ற செவ்விதான மார்க்கத்தைக் கண்டவரே இவ்வய்யங்கார். அதனை அநுட்டான முறையில் நடத்திக் காட்டி, பின்புள்ளாரும் பின்பற்றி ஒழுகும் வண்ணம் சீரியதோர் மாண்பில் சிறப்புறச் செய்து சீர்மையுடன் திகழ்கின்றார் இத்தீர்த்தர். அனைத்துலகம் அதிசயிக்குமாறு தூப்புலில் அன்புடன் நடத்திய ஸ்ரீராமாநுஜ தயாபாத்ர மஹோத்ஸவம், ஸ்ரீபாதுகா ஸஹஸ்ர மஹோத்ஸவம், செந்தமிழ்த் தலைவரான பேயாழ்வார் திருவவதாரத் திருப் பதியான திருமலையில் நடத்திய தயாசதக மஹோத்ஸவம், தஞ்சாவூர் மதுரை முதலிய இடங்களில் நடத்திவைத்த ஸ்ரீ சங்கற்ப சூரியோதய மஹோத்ஸவம் முதலியன இதற்குத் தக்க சான்று பகரும்.

பிறர்கண் காணும் நல்லனவற்றைக் கண்டு அவற்றை உலகறியுமாறு பறை சாற்றும் பெற்றி இவருடையதே என்னலாம். இதன் மெய்ம்மையை இராமாவதார ப்ரஸங்கியாகிய வஸிஷ்ட பாரதியார் பல்லாண்டுகட்குமுன் இந்துநேசன் வாயிலாக எழுதிவந்த ஜீவிய சரித்திரத்தில் விசதமாகப் போற்றியுள்ளார். ஆங்கிலக் கல்வியால் சநாதந தர்ம நெறியினை அவமதித்திருந்த பல்லாயிரவர்கட்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தி நற்றொண்டாற்றி வந்த ஸ்ரீ. யு. பி. கிருஷ்ணமாசாரியர் அங்ஙனம் நன்மை புரியுமாறு அவ்வப்போது அவருக்கு பல்வேறு உதவியளித்து ஊக்கியவர் இவ்வுத்தம சீலரே. திருவயிந்திரபுரம் பண்டித பூஷணம் மஹாமஹோபாத்யாய சேட்லூர் ஸ்ரீ. நரஸிம்மாசார்ய ஸ்வாமியை அனைவரும் போற்றும் பெற்றியுடன் திகழ அடிக்கோலி, உடனிருந்து அநுபவித்துப் பிறரும் அவ்வநுபவத்தில் அழுந்துமாறு உதவிய பெருநல்லுதவிக்கு இவ்வய்யகம் என்ன கைம்மா றியற்ற முடியும்! ஒப்பிலியப்பன் ஸ்ரீராம தேசிகாசாரியரைத் தேசிகத் தொண்டில் ஆழங்காற் படுமாறு

செய்த அண்ணல் யார்! இதுகாறும் வெளிவராத ரீதியில் மனத்தைக் கவரும் வண்ணம் "தேசிகப் பிரபந்தம்" பதிப்பிக்குமாறு செய்து, அதற்கு அணியாய் விளங்கும் சூத்திர வடிவமான முகவுரையை உதவிய நம் ஸ்ரீநிவாஸ வள்ளலின் வண்மையே வண்மை. அம்முகவுரை அடிக்கடி படித்துப் படித்து அநுபவித்தாலும் ஆராத வமுதக் கடலாய் அமைந்துள்ளது. அப்பிரபந்தத்துக்கு விசேட பொலிவைத் தருவது அதில் விளங்கும் நம் வேதாந்த வாரியனின் திருவுருவப் படம். ஸ்ரீ வைஷ்ணவ உலகிற்கு அழகினுக் கழகு செய்யும் இம்மூர்த்தியைத் தந்தருளிய தேசிகபக்த சிகாமணிக் கன்றோ ஸ்ரீ பராங்குச பரகால மடாதிபதிகள் போர உகந்தளித்த பட்டமும் பதக்கமும் ஏற்கத் தகும்! ஸ்ரீ தேசிக தர்சந ரத்ந தீப ப்ரகாசம் மிளிரும் பெற்றியே பெற்றி. கம்பர் படத்தையும் கல்வியாளர் திகைக்கும் வண்ணம் ஆக்கியுள்ளார். நான் முகனினுஞ் சீரிய ரிவரெனின் பொய்யாகுமா? இவர் படைப்பு அழியாத தொன்றல்லவா? ஸ்ரீ அஹோபில மடத்துத் திவ்யாஸ்தானத்தில் தற்போது எழுந்தருளியிருக்கும் யிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கரால் நிறுவப்பெற்றுள்ள மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத கல்லூரி மண்டபத்தை அழகுறச் செய்து விளக்குவது இவ்வள்ளலார் நாட்டிய கோஷ்டிபுரம் ஸ்ரீ. ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி, வங்கிபுரம் ஸ்ரீ. எஸ். வாசுதேவாசாரிய ஸ்வாமி இவர்களின் உன்னதமான உருவப் படங்களல்லவா! அத் திறப்பு விழாவன்று உன்னதபதவி தாங்கி நிற்குஞ் சீரியருந் திகைத்து ஆச்சரியமுற்று ஆநந்திக்குமாறு செய்த ஓர் அற்புதம் அன்று அங்கு உடனிருந்த அடியேன் முதலானோர் அநுபவசித்தம்.

பல்லாண்டுகளாகச் சம்பிரதாயாபிவிருத்தியை முன்னிட்டு நடைபெற்று வந்த வேதாந்த தீபிகையின் பத்திராதிபராக இந்த மஹான் இருந்தபோது, அதன்மூலம் புரிந்துவந்த தேசிகத் தொண்டு மிகவும் போற்றுதற் குரியது. ஆற்றல் மிகுந்த எழுத்தாளர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்குள் மறைந்துகிடந்த அபாரசக்தியை உலகிற்குக் காட்டி, அவர்களை மேன்மேலும் உத்ஸாகப்படுத்தி, நற்றொண்டாற்றச் செய்த தனிப்பெருந் தகைமையும் இத்தனிச் செல்வருடையதே. சிறந்த கட்டுரையின் ஆரம்பத்தில் இவரது ஒப்புயர்வற்ற மதிப்புரை விளங்கப் பிரசுரித்துவந்த பான்மை வியாஸம் எழுதி யுதவியவர்கட்கும் படிப்பவர்கட்கும் ஆநந்தத்தை அளித்தது. "திருவள்ளுவரும் ஸ்ரீ வைஷ்ணவரும்" என்ற கட்டுரையைச் சிலாகித்து அய்யங்காரவர்கள் அனுப்பிய கடிதம் மேன்மேலும் அடியேனை ஆராய்ச்சித் துறையில் புகுத்தி நன்மணிகளைக் கண்டெடுக்கப் பேருதவி புரிந்தது. தனது அபிப்ராயத்தை உள்ளபடி உரைக்கும் உத்தமரே இப்பேரறிஞர். குறைகளைக் கண்டால் சமயோசிதமாக எடுத்துக் காட்டி, அவற்றை அகற்றும் அழகு ஒரு தனி யழகு அவ்வப்போது அவர் அளிக்கும் சிறந்த போதனைகள் மேன்மேல் ஞானாபிவிருத்தியை நல்கும். அந்தப் பத்திரிகை நடாத்துங்காலை "ஸ்ரீ வேதாந்த தேசிக மலர்" "ஸ்ரீ பாஷ்யகாரர் மலர்" என்ற இரண்டு அழகிய மாலைகள் அவர்கள் திருநக்ஷத்திரங்களில் வெளியிடச் செய்தது வேறெவரும் அதுகாறும் காணாத அதிசயம். அம்மலர்கள் முழுமையும் அவ்வாசாரியர்களைப்பற்றி அநேக வித்வான்கள் அற்புதமாக வரைந்த வியாசங்கள் விளங்கின. திருவயிந்தைநகர் அமர்ந்துள்ள ஸ்ரீ வேதாந்த தேசிகனும், ஸ்ரீ பெரும்பூதூரிற் றுலங்கும் ஸ்ரீ பாஷ்யகாரரும் அவற்றை அலங்கரித்து அன்பர்கள் அகங் குளிரச் செய்தனர். இம்மலர்கள் தீபிகையின் தனிச்சிறப்பே. ஸ்ரீ திருப்புட்குழி ஸ்வாமி வைபவமும் பரக்க வெளிவந்தது இக்காலத்திற்றான். இங்குக் கூறவேண்டுவது ஒன்றுண்டு. "கம்பர் மதம் வைஷ்ணவம்" என்ற கட்டுரை நயத்தை அநுபவித்ததை அடியேனுக்குணர்த்தி ஆசீர்வதிக்க அடியேன் குடிசைக்கு எழுந்தருளி. அப்பொழுது யான் அங்கில்லாததால் சற்றே தங்கி, வந்தபின் அருளிய அமுதவாசகம் அருமருந்தே. என்னே இம்மகானின் ஸௌலப்ய ஸௌசீல்ய வாத்ஸல்யாதிகள்! 'நிறைகுடம் நீர் தளும்பலில்' என்பது முதுமொழி யன்றோ!

சீரோங்கு வள்ளலாரான வண்பாக்கம் ஸ்ரீநிவாஸய்யங்கார் அனந்த கல்யாண குண நிலயம். இவர் இருக்குமிடமே நன்னிலம். பெருமாள் கோயில் திருவஹீந்த்ர புரம் முதலிய திவ்ய தேசங்களில் நடைபெறும் உத்ஸவங்கள் மஹோத்ஸவங்களாகச் சிறப்புறுவது இந்த ஸ்வாமி எழுந்தருளுங் காலங்களிற்றான் என்பதை அனைவரும் நன்கு அறிவர். "அத்திகிரி...... அத்திகிரியே" என்ற தேசிகமாலைப் பாசுர வியாக்கியானம் வைசாக வுத்ஸவாதிகளில் அத்திகிரி "ஹஸ்திகிரி"யைச் சார்பவர்களுக்கு வெள்ளிடை விலங்கல். வைதிகர்களைக் கௌரவித்து, அவர்களது ஒழுக்கம் குன்றாது நிலைத்தோங்கப் புரியும் உதவி இணையற்றது. "அம்பரமே தண்ணீரே சோறே அறஞ் செய்யும் எம்பெருமானே இவர்" என அன்னவர் கொண்டாடுவது மிகவும் பொருத்த முடையதே. அறவோர்க்கு ஸாரூப்யத்தை நல்கும் அந்தணரோவென அறிஞர் ஐயுறு கின்றனர். 'தருகை நீண்ட தயரதன்' எனக் குறித்தான் கம்பன். இவ்வண்ண லுந் தயரதனே என்பேன். இவரது குடும்பமே சீரோங்கு செல்வ நிலயம். "மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் நன்கலன் நன்மக்கட் பேறு" என்ற மாதாநுபங்கியின் பொது மறைக்கு இலக்காய் இலங்கும் இல்லமே இவரது. எல்லாம் ஒருங்கே அமையப் பெறுதல் ஆண்டவன் திருவருட் செல்வப் பொலிவை விளக்குமல்லவா? விருந்தோம்பல், பந்துபரிபாலனம், இனியவை கூறல் என்பன, இம்மகானுடன் கூடப் பழகிக் கற்க வேண்டியவை. எங்கு இருந்தாலும் அன்பரீட்டம் இவரை அகலாது. இவரது திருமேனி சோபையும், அன்று அலர்ந்த செந்தாமரையினை வெல்லுந் திருமுக மண்டலமும், அருள் நோக்குடனே ததும்பும் திருக்கண்களும், அன்பை வெளிக் காட்டும் புன்சிரிப்பும், தருகையைத் தவிர வேறொன்றறியாத திருக்கைகளும், நெற்றியின் அழகைச் சிறப்பிக்கும் திருமண்காப்பும், உலகமடங்கலும் அன்பர்குலம் எனக் கருதும் திருவுள்ளமும், மாசற்ற பஞ்ச கச்சத்துடன் கூடித் துலங்கும் ஆடையும், செவிக் கணியாய்ச் செவிச் செல்வத்தை வளர்க்கும் வைரக் கடுக்கன்களும், கைவிரல்களை யலங்கரிக்கும் மோதிரங்களும், இவரை "எழில் அழகர்" என்றே நிரூபிக்கும். இவரது சம்பாஷணை அநுபவிக்க அநுபவிக்கத் தெவிட்டாத தெள்ளமுதமே. பேசுவதுபோல எழுதி எழுதிபவர் வாசகர்முன் நிற்பதுபோல் காட்டும் தனி ஆற்றல் இவருக்கு உண்டு. இவர் எழுதியுள்ள 'கீதோதயம்' இதற்குத் தக்க தனிச் சான்று. சரணம் புகுந்தோரைக் காத்தலே அறத்திறன். இதனை இவர்பால் பூரணமாகக் காண்கலாம். தெய்வ பலத்தையே பலம் எனக் கருதும் இவ்வாரியர் தன்னை நலன் நாடி வருபவர்கட்காக நிஷ்டைகூடி அவர்கட்கு நலனைப் பெருக்குதல் மிகவும் போற்றத் தகுந்தது. இவ்வுண்மையை அவர்களிற் சிலர் தாமாகவே அடியேனிடம் பன்முறை கூறியிருக்கின்றனர். தர்ம ரக்ஷணத்தில் இவரது ஆர்வம் அளவு கடந்தது. ஹிந்து மட மசோதா நடமாடிய காலத்தில், இவரது வீரத்தன்மையை உலகு நன்கு அறிந்து கொண்டாடிற்று. அதர்மம் தலையெடுக்கத் தொடங்கும்பொழு தெல்லாம் இவரது வீரகர்ஜனை அதனை அறவே அழித்தற்குப் பேருதவி அளித்தது. இவரது ஆசார்ய பக்தியை யாரே அறியவல்லார்? குருபரம்பரைக்கு ஒரு மஹோத்ஸவம் என்பது இன்று இவர் கண்டு காட்டியதேயன்றி, இதுகாறும் வேறெவருங் காணாததே. சென்ற வைசாக மஹோத்ஸவத்தில் "பட்டர் திருநாட் கொண்டாட்டம்" என்ற ஒப்பற்ற உத்ஸவத்தை நடத்திய அழகுக்கு எதனை உவமிக்கலாம்? பேரருளாளன் இவரது ஆவியுள் கலந்து இவ்வாறு ஆக்குகின்றான் என்றே தெளியவேண்டும். இவரது ஔதார்யம் பன்னி யுரைப்பின் மிகப் பெரியதோர் புராண ரத்னமாகும். உலகம் நன்கு வாழவேண்டும் என்பது இவரது பேரவா. பகவானைத் தனக்கு நாயகனாகவே கருதி, உத்தம நாயகியாகத் தன்னைப் பாவித்து, அவனது உகப்புக்காகவே தன்னை அலங்கரித்துக்கொண்டு அவன் திருமுன்னர்ச் சேர்ந்து நிற்பது ஒரு பெருந் தத்துவ விளக்கமாகலின், நல்லாரனைவரும் அந் நன்முறையை அநுசரிப்பது நலமே. இதுகாறுங் கூறியவாற்றால், இவர் உத்தமமான சரணாகதி நிஷ்டர் என்னத் தட்டில்லை.

இவரே அன்பருக் கன்பர். இவரே வள்ளல்களிற் றலைவர். இவரே உத்தமோத்தமர். இவரே ஸ்ரீ வைஷ்ணவர். இவரே குணக்குன்று. இவரே அடியார்க்கு நல்லார். இவரே நல்லற மூர்த்தி.

இச்சங்கத்தின் அபிவிருத்தியிலேயே பூரண நோக்குடைய ஸ்ரீநிவாஸ வள்ளல் எல்லாம் வல்ல இறைவனது திருவருள் பெற்று, இன்பமிகுந்து, அரோக திட காத்திரராய் எழுந்தருளியிருந்து, இன்றுபோல அன்பரை ஆதரித்து வருவாராக. அவரது உற்றாரும் உறவினரும் எம்பெருமான் அநுக்ரஹம் பெற்று, மேன்மேலும் சிறப்புறுவாராக. அன்னவரது சதாபிஷேக மகோத்ஸவத்தையும் இச்சங்கத்தார் தக்க முறையிற் கொண்டாடி இன்புறுவாராக. பொங்கும் மங்களம் எங்குந் தங்குக.

ப. ரெ. திருமலை அய்யங்கார்,
15, கணபதி முதலி தெரு, திருவல்லிக்கேணி.

---

(2)

ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமியின் 72வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

ஸுபாநு௵ கார்த்திகைமீ 27௳ (12—12—43) ஞாயிற்றுக்கிழமை, ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம தில்லஸ்தாநம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகன் 72-வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம், தில்லஸ்தாநத்தில் ஸ்ரீ ஸ்வாமியின் ஆஶ்ரமத்தில் வெகு ஸம்ப்ரமமாக நடைபெற்றது. அம்மஹோத்ஸவத்துக்குக் கல்யாணபுரம் ராயம் பேட்டை முதலிய அக்ரஹாரங்களிலிருந்து அநேக ஸ்வாமிகள் எழுந்தருளி ஸேவை ஸாதித்தனர். காலையில் அக்ரஹாரிகாள் அனைவரும் ஏகமுகமாக ஆஶ்ரமத்துக்கு எழுந்தருளினதும், ஆசார்ய ஸம்பாவனை நடைபெற்றது. அதன் மேல், அவ்வக்ரஹாரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் ஸந்நிதியில் தக்காலம் நடந்துகொண்டிருக்கும் லக்ஷார்ச்சநாராதநத்தின் சாத்துமறை ஸமயத்தில், ஸ்ரீ ஸ்வாமி பெருமாளை ஹ்ருதயங்கமமாக மங்களாஶாஸநம் செய்தருளும்படி யிருந்தது. பிறகு அவ்வக்ரஹாரிகாள் மிகுந்த பக்தி ஶ்ரத்தையோடு சதீபாராதநத்தை அந்த ஸந்நிதியில் ஸம்ப்ரமமாக நடத்தி வைத்தனர். ததநந்தரம், ஸ்ரீ ஸ்வாமி திருவடியும், டீச்சர்ஸ் காலேஜ் (ரிடயர்ட்) தமிழ்ப் பண்டிதருமான, ஸ்ரீ. உப. ஓரகடம் கோ. ஸுதர்ஶநாசார்யர், ஸ்ரீ ஸ்வாமி விஷயமாகச் சில பாசுரங்களை இயற்றி, அவற்றை ஸ்ரீ ஸ்வாமியின் திருவோலக்கத்தில்—கோஷ்டியில்—படித்துப் பொருளைச் சொல்லி அரங்கேற்றினர். ஶ்ரோதாக்கள் யாவரும் அவற்றைக் கேட்டு ஆநந்தித்தனர். “ஆசார்யாத்தி தேவதாம் ஸமதிகாம் அந்யாம் ந மந்யாமஹே” “ஆசார்ய தேவோ பவ” என்று “மனத்தில் எழில் ஞான விளக்கை ஏற்றி இருளனைத்தும் மாற்றினதற்கு மாயனும் கைம்மாறு காண்கிலாத பரதேவதா துல்யர்களான ஆசார்யர்கள் விஷயத்தில் போற்றியுரைப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்குபுகழ்ச் சாற்றி வளர்ப்பதும் நாம் முன்னம் பெற்றதற்கு எம்மாத்ரம்? சற்றல்லவோ?” என்று ஸாதித்த நம் தூப்புல் வள்ளலின் தூய்மொழிகள் சிஷ்ய க்ருத்யம் செய்யும் ஒவ்வொருவரும் செய்தநுபவிக்க ப்ராப்தம்.

ஸ்ரீ ஸ்வாமி திருநக்ஷத்ர திநத்தை அடுத்த மூன்று நாட்களில், முதல் இரண்டு நாட்கள் ‘ஆழ்வார் வைபவ’மும், அடுத்த நாள் கம்பராமாயணத்தில் ‘திருவடி பிராட்டியைத் தொழுதது’ எனும் விஷயமும், ஷை ஸ்ரீ ஸுதர்சநாசார்யரால் மிக ரஞ்ஜகமாய் உபந்யஸிக்கப்பட்டன.

—T. S. சேஷாத்ரி தாஸன், தில்லஸ்தாநம்.

(3)

பாதூரில் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரக் கொண்டாட்டம்

நாளது ஸ்வபாநுஸ்ரீ தைமீ 12உ (25—1—44) செவ்வாய்க்கிழமை உத்திராட நக்ஷத்ரம் கூடிய சுப தினத்தில் ஸ்ரீ அஹோபில மடம் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ர உபய வேதாந்தாசார்ய ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்தாரண ஸார்வபௌம ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய 65-வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம், பாதூரில், ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸ யதீந்த்ர மஹாதேசிகனுடைய ப்ருந்தாவனத்தில் வழக்கம் போல் நடக்கிறபடியால், ஆஸ்திக மஹாஜநங்கள் ஷை மஹோத்ஸவத்திற்கு எழுந்தருளி, ஸ்ரீ அழகியசிங்கருடைய அநுக்ரஹத்திற்குப் பூர்ண பாத்ர ராகும்படி ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

---

(4)

கல்யாணபிவர்த்திநீ ஸபை

[ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத பாடசாலை, மதுராந்தகம்]

சென்ற மாஸத்தில் ஷை ஸபையின் ஆதரவில், ஷை பாடசாலையில் ந்யாய ஶிரோமணி உத்தர பாகத்தில் வித்யார்த்தியாயுள்ள திருக்கள்ளம் ஸ்ரீ நரஸிம்ஹ ராகவன் என்பவர் 'வித்யையின் மஹிமை' என்னும் விஷயத்தைப் பற்றி வ்யாஸமொன்று எழுதிப் படித்தார். அதில், மநுஷ்யர்களால் அர்த்திக்கப்படும் புருஷார்த்தங்களுள் மோக்ஷம் என்பதே மிக ப்ரதாந மென்றும், அதைப் பெறுவதற்கே விவேகிக ளெல்லாரும் ப்ரயத்நப்படவேண்டு மென்றும் வற்புறுத்தப்பட் டிருப்பதுடன், ஸாமாந்யமாக வித்யையின் மஹிமையும் மிகவும் புகழப்பட்டிருக்கின்றது. அவகாஶாபாவத்தால் அந்த வ்யாஸம் இந்தப் பத்ரிகையில் ப்ரசுரம் செய்யப்படக் கூடவில்லை.

---

(5)

தென் ஆர்க்காடு ஜில்லா விழுப்புரத்தி லிருக்கும் 'ஆர்க்காட் ப்ரெஸ்' என்னும் பெயருள்ள ஒரு அச்சுக்கூடத்திலிருந்து "ஜைமினிப் பஞ்சாங்கம்" என்னும் 1944-ம் ஸ்ரீ வருஷத்துப் பஞ்சாங்கம் ஒன்றை நாம் வரப்பெற்றோம். அதில் அநேக உபயுக்தங்களான விஷயங்கள் வெளிப்படுத்தப்பட் டிருப்பதுடன், 12 மாஸத்துத் தேதிகளும் இங்கிலீஷ் காலெண்டர்களிற்போல் கிழமைகள் விளங்குமாறு வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு ப்ரதியின் விலை 0—7—6. வேண்டுவோர் "ஆர்க்காட் ப்ரெஸ், விழுப்புரம், தென் ஆர்க்காடு ஜில்லா" என்னும் விலாஸத்துக்கு எழுதி அதைப் பெற்றுக்கொள்ளலாம்.

---

(6)

ஸ்ரீ வேதாந்த தேசிக பக்த ஸபை, மதுரை.

த்வாதச வருஷோத்ஸவப் பத்ரிகை

ஷை ஸபையின் த்வாதச வருஷோத்ஸவம், நாளது ஸ்வபாநுஸ்ரீ மார்கழிமீ 10, 11, 12உகளான (1943ஸ்ரீ டிஸம்பர்மீ 25, 26, 27) சனி, ஞாயிறு, திங்கட் கிழமைகளில், மதுரை கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெரு, ராத்திரி சத்திரம் ஹநுமார் கோவிலில் நடைபெறுகிறது. அவ்வமயம் சென்னை பூர்வ ஹைகோர்ட்டு ஜட்ஜ தேசிக தர்சந ரத்நதீபம் ஸ்ரீ. உப. வே. V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி

பி. எ., பி. எல். அக்ராஸநம் வகிக்கவும், மதுரை அட்வகேட் ஸ்ரீ. உப. வே. T. C. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி பி. எ., பி. எல்., உத்ஸவத்தை உபக்ரமிக்கவும் அன்புடன் அங்கீகரித்திருக்கிறார்கள். ஸபையின் அங்கத்தினர்களும் ஆஸ்திகர்களனைவரும் விஜயம் செய்ய ஸவிநயம் கேட்டுக்கொள்ளுகிறோம்.

R. அண்ணாதுரை அய்யங்கார், ரிடயர்டு இஞ்ஜினியர், ஸபை அத்யக்ஷர். S. ராமஸ்வாமி அய்யங்கார், பி. எ., பி. எல்., வக்கீல், காரியதர்சி.

---

(7)

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:
ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்ஶடகோப
ஸ்ரீஸ்ரீரங்கஶடகோப யதீந்த்ரமஹாதேஶிகாய நம:

ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தாநத்தில் 42-ம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீஸ்ரீரங்கஶடகோப யதீந்த்ரமஹாதேஶிகன் திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளியிருந்தபோது 'ஸநாதந தர்மம்' என்னும் விஷயத்தைப்பற்றி ஓர் அத்புதமான உபந்யாஸத்தைச் செய்யும்படியிருந்ததென்பது நமது ஸுஹ்ருத்துக்கள் யாவரும் அறிந்த விஷயம். அப்போது ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தாநுஷ்டாநத்தில் வரும் பஞ்ச ஸம்ஸ்கார ஶரணாகதிகளைப்பற்றி ஸப்ரமாணமாகச் சில விஷயங்களைச் சொல்லி, ப்ரஸக்தாநு ப்ரஸக்தியினால் மதத்ரய வைலக்ஷண்யத்தைச் சொல்ல ஆரம்பித்து, தம் மதத்தில் ஶரணாகதி என்று ஓர் உபாயம் அநுஷ்டிக்கப்படுவதாகவும், அந்த உபாயம் தன்னை அநுஷ்டித்தவனுக்கு அந்த ஶரீரத்தின் முடிவிலேயே மோக்ஷத்தைத் தருமென்றும், அது ஸுகரமென்றும் சொல்லிவிட்டு, அத்வைத மதத்தில் 'தத்த்வமஸி' வாக்யத்தினால் ஶாப்தாபரோக்ஷம் பிறந்தால் அவித்யா நிவ்ருத்தியுண்டாய், ப்ரஹ்மைக்யரூப மோக்ஷம் உண்டாகிறதென்றும், அது எந்த ஜந்மத்தில் வருமென்று நிர்ணயம் செய்யப்படவில்லை என்றும், அதில் உள்ள அஸௌகர்யத்தைச் சொல்லிவிட்டு, மத்வ மதத்தில் "இங்குப் பக்தி பண்ணுமவர்கள் சதுர்முக ப்ரம்ஹ லோகத்திற்குப் போகிறார்களென்றும், அங்குச் சில காலம் தங்கியிருந்து, மஹா ப்ரளயத்திற்குப் பின் அந்த ப்ரம்ஹாவுடன்கூட ஸாக்ஷாத் பரப்ரம்ஹத்தை அடைகிறார்களென்றும், க்ரமமுக்தி பக்ஷம் சொல்லப்பட்டிருக்கிறது; ஆகையால் அதிலும் விளம்பித்து மோக்ஷம் சொல்லுவதால் அஸௌகர்யம் உள்ளது என்றும், அப்படி ப்ரம்ஹ லோகம் போகுமவன் இச்சரீரத்தை விட்டு ஸத்யலோகத்தின் அருகே போகும்போது சதுர்முக ப்ரம்ஹா வாயைத் திறக்க, உடனே ஜீவன் அண்டம்போல் விசாலமாயிருக்கும் அவர் வயிற்றுக்குள் சென்று, அவ்விடத்தில் சில காலம் பக்தி யோகத்தை அநுஷ்டித்து ப்ரம்ஹாவுடன்கூட பரப்ரம்ஹத்தை அடைகிறான்" என்று உபந்யஸிக்கும்படியிருந்தது. இந்த உபந்யாஸத்திலுள்ள விஷயங்களையெல்லாம் வெகுவாக ஶ்லாகித்து 'ஹிந்து' பேபரில் எழுதிய மத்வ மதஸ்தரான ஸ்ரீமான் நாகராஜ சர்மா என்பவர், ஸ்ரீ அழகியசிங்கர் ஸாதித்த கடைசி விஷயத்தில் அதற்கு ப்ரமாணம் இல்லை என்று அவர் நினைப்பதாக ஏற்படுகிறது. அதற்குச் சுருக்கமாய் இங்கு ஒரு ஸமாதாநம் சொல்லுகிறோம்.

இந்த உபந்யாஸம் இதர மத தூஷணத்துக்காக வந்ததன்று என்பதை எல்லோரும் அறியவேண்டும். மத்வ பாஷ்யத்தில் '**कार्यं बादरिः, सामीप्यात्तु, कार्यात्यये**' என்ற மூன்று ஸூத்ரங்களால் அர்ச்சிராதிகணம் கார்யபூதனான சதுர்முகனையே அடைவிக்கிறதென்றும், '**ब्रह्मविदाप्नोति परं**' என்கிற ஶ்ருதி, ஸமீப காலத்திலேயே பரப்ரம்ஹத்தையும் அடைகிறான் என்று சொல்லுகிறது என்றும், 'ஸமீபம் என்றால் எப்போது!' என்று ஆக்ஷேபித்துக்கொண்டு, மஹாப்ரளயத்தில் ஸத்யலோகாத்யக்ஷனான அந்த சதுர்முகனோடுகூட ஜீவனும் பரப்ரம்ஹத்தை அடைகிறானென்றும்,

பாதரி மதத்தைச் சொல்லிவிட்டு, 'परं जैमिनिः मुख्यत्वात्' என்ற ஸூத்ரத்தால் 'स एनान् ब्रह्म गमयति' என்கிற ஶ்ருதியிலுள்ள நபும்ஸக ப்ரம்ஹ சப்தத்திற்குப் பரப்ரம்ஹ விஷயத்திலேயே முக்யத்வம் உண்டாகையால் அவனையே அர்ச்சிராதி கணம் அடைவிப்பிக்கிறது என்றும், ஜைமினி மதத்தினால் பாதரி மதத்தைக் கண்டித்து விட்டு, மேலே 'अप्रतीकालम्बनान्नयतीति बादरायणः ...उभयथा च दोषात्' என்னும் ஸூத்ரத்தில் அர்ச்சிராதிகணம் ப்ரதீகோபாஸக பின்னர்களையே ஸாக்ஷாத் பரப்ரம்ஹத்தை நயிப்பிக்கிறதென்று சொல்லப்படுகிறதென்றும் சொல்லி,

"प्रतीकं येह उद्दिष्टो येषां तत्रैव दर्शनम्। न तु व्याप्ततया क्वापि प्रतीकालम्बनास्तु ते। अप्रतीका देवतास्तु ऋषीणां शतमेव च। राज्ञां च शतमुद्दिष्टं गन्धर्वाणां शतं तथा। एतेऽधिकारिणो व्याप्तदर्शनेऽन्ये न तु क्वचित्। अयोग्यदर्शने, यत्नात् भ्रंशः पूर्वस्य चापि तु। अप्रतीकाश्रया ये हि ते यान्ति परमेव तु। स्वदेहे ब्रह्मदृष्ट्यैव गच्छेद्ब्रह्म सलोकताम्। ब्रह्मणा सह संप्राप्ते संहारे परमं पदम्"

என்கிற காருட வசநங்களை உபந்யஸித்து, ப்ரதீகோபாஸகர்கள் ஸ்வதேஹஸ்த ப்ரம்ஹோபாஸகர்க ளென்றும், அப்ரதீகோபாஸகர்கள் ஸர்வவ்யாப்த ப்ரம்ஹோபாஸகர்கள் என்றும், அவர்களே தேவதைகள் ரிஷிகள் நூறு அரசர்கள் நூறு கந்தர்வர்கள் நூறு என்று கணக்கிட்டு, அவர்களே அர்ச்சிராதி மார்க்கத்தால் பரப்ரம்ஹத்தை அடைகிறார்க ளென்றும், ஸ்வதேஹத்தில் ப்ரம்ஹ த்ருஷ்டி பண்ணும் மநுஷ்யாதிகள் சதுர்முக ப்ரம்ஹ ஸாலோக்யத்தையே அடைந்து முடிவில் பரப்ரம்ஹத்தை அடைகிறார்க ளென்றும் நிஷ்கர்ஷிக்கப்பட்டது. இதில் அர்ச்சிராதிகணம் சிலரையே பரப்ரம்ஹத்தை அடைவிப்பிக்கிறதென்றும், மற்றவர்கள் சதுர்முக ப்ரம்ஹலோகம் சென்று, பின்பே பரப்ரம்ஹத்தை அடையவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறது. ஆனால் சதுர்முக ப்ரம்ஹலோகம் போகும்வழி ஸூத்ரகாரராலும் பாஷ்யகாரராலும் சொல்லப்படவில்லை. அதை ப்ரமாணாந்தரங்களைக் கொண்டே நாம் நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. அதில் மஹாபாரதம் ஶாந்தி பர்வம் ஜாபகோபாக்யானத்தில் 194-வது அத்யாயத்தில்,

"निरिच्छंस्त्यजति प्राणान् ब्राह्मीं संश्रयते तनुम्।
अथवा नेच्छते तत्र ब्रह्मकाय निषेवणं॥"

என்று 25, 27-வது ஶ்லோகங்களில் ஜாபகன் ப்ரம்ஹ காயத்தை நிஷேவணம் செய்கிறானென்று ஸாமாந்யமாய் ப்ரம்ஹ ஶரீர ப்ராப்தியைச் சொல்லி, 198-வது அத்யாயத்தில்

"तालुदेशमथोद्दाल्य ब्राह्मणस्य महात्मनः।
ज्योतिर्ज्वाला सुमहती जगाम त्रिदिवं तदा॥"

என்கிற ஶ்லோகத்தில் ஜ்யோதிர்மயமான ஜாபகன் தாலு தேச மார்கத்தால் ப்ரம்ஹ லோகம் சென்றானென்றும், ப்ரம்ஹா 'ततः स्वागतमित्याह तत्तेजः प्रपितामहः। प्रादेशमात्रं पुरुषं प्रत्युद्गम्य विशांपते' என்று ஆரம்பித்துச் சில ஶ்லோகங்களால் யோகிகளுக்கும் ஜாபகர்களுக்குமுள்ள தாரதம்யத்தைச் சொல்லி, மேலே

"उष्यतां मयि चेत्युक्त्वा व्याददे स ततो मुखम्।
अथास्यं प्रविवेशास्य ब्राह्मणो विगतज्वरः॥
राजाप्येतेन विधिना भगवन्तं पितामहम्।
यथैव द्विजशार्दूलस्तथैव प्राविशत्तदा॥"

என்கிற இரண்டு ஶ்லோகங்களில் ப்ரம்ஹா ஜாபகனைக் குறித்து 'என்னிடம் வஸி' என்று சொல்லி வாயைத் திறந்ததாகவும், அதில் ப்ராம்ஹணன் நுழைந்ததாகவும், அப்படியே ஜாபகனோடுகூட வந்த மஹாராஜனும் ப்ரம்ஹாவின் வாயின் வழியாக ப்ரவேசித்தா னென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் க்ரம முக்தி பக்ஷ விஷயத்தில் இந்த ரீதியை அநுஸரிப்பது உசிதம் என்று அர்த்த வசநங்களையே ப்ரமாணமாக வைத்து (வசனங்களை மட்டும் உதாஹரிக்காமல்) க்ரமமுக்தி விஷயத்தில் அந்த ஶ்லோகார்த்தத்தையே உபந்யஸித்திருப்பதாக ஏற்படுகிறது.

தேவனூர்விளாகம்—லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர்
[ப்ரின்ஸிபால், ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத காலேஜ், மதுராந்தகம்.]

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

" योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥ "

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

"ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியை" ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வர்ஷங்கள் ஆகிவிட்டன. இப்பொழுது நடைபெறுவது மூன்றாவது வர்ஷம். இம்மாதிரிஒருபத்ரிகையைப்ரவர்த்திப்பது,

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியை

ஸ்ரீ அழகியசிங்கராற் செய்யப்பட்டு வரும் உபகார பரம்பரைகளுள் மிகவும் ப்ரதாநமானது. வேதார்த்தங்களில் வேண்டும் ஸாரதமாம்ஶத்தை ஸர்வருக்கும் அதிகரிக்கலான பாஷையால் ஸங்க்ரஹித்து, அதைக்கொண்டு மஹா ஜநங்களுக்குள் ஸத் பதத்தைப் பரவச் செய்யவேண்டுமென்பதே ஸ்ரீ அழகியசிங்கருடைய முக்ய அபிஸந்தி. பாக்யாதிகர்களான ஆஸ்திகர்கள் எல்லாரும் அந்த அபிஸந்தியை யதாவத்தாக உணர்ந்து, "तेनावलोक्य कृतिनः परिभुञ्जते तम्" என்கிறபடி அதை அநுபவிப்பதுடன் அதை மஹாஜநங்களுக்குள் பரவச் செய்யவேண்டுமென்று நாம் ஸவிநயம் ப்ரார்த்திக்கிறோம்.

*   *   *

ஸ்ரீ அழகிய சிங்கர் சென்ற வாரத்தில் விழுப்புரத்திற்கு ஸமீபத்திலுள்ள பாதூர் என்னும் க்ராமத்தில் எழுந்தருளி யிருந்ததாக அறிகின்றோம். அவ்விடத்தில் 40-வது

ஸ்ரீ அழகிய சிங்கரின் யாத்ரை

பட்டத்தை அலங்கரித்த காருக்குரிச்சி ஸ்ரீ பெரிய அழகிய சிங்கரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவம் நடைபெற்றதாம். 41-வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கரின் திருநக்ஷத்ரமும் அவ்விடத்திலேயே நடைபெறுகின்றதாம். இப்பொழுது பாதூரை விட்டுப் புறப்பட்டு ஸ்ரீரங்கத்தை நோக்கி யாத்ரோத்ஸவம் நடைபெறுகின்றது என்று ஸமாசாரம் கிடைத்திருக்கிறது.

*   *   *

சார்வாக மதமென்று ஒரு மதம், முற்காலத்தில் நமது தேஶத்திலிருந்த தென்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அது

தேவகுருவாகிற ப்ருஹஸ்பதியால் ஏற்படுத்தப்பட்ட தென்றும், அது காரணமாக அதற்கு ப்ருஹஸ்பதி மதமென்றுமற்றொருபெய ருண்டென்றும் சொல்லுகிறார்கள். அந்த மதத்தின் கொள்கை களாவன: "ஸ்வர்க்க மில்லை; அபவர்க்க மில்லை; ஆத்மா இல்லை; பார லௌகிகமானது ஒன்று மில்லை; வர்ணாஶ்ரமாதி க்ரியைகள் ஒன்றும் பல ப்ரதங்களல்ல; ஔபாஸநம் அக்நி ஹோத்ரம் முதலானவை யெல்லாம் புத்தியும் பௌருஷமு மற்றவர்களுக்கு ஜீவி கையாக மாத்ரமாகவே ஏற்படுத்தப்பட்டவை; ஒவ்வொருவரும் இந்தத் தேஹம் இருக்கும் காலமெல்லாம் ஸுகமாக ஜீவிக்கும் மார்க்கத்தையே தேடவேண்டும்; ப்ரத்யக்ஷ மொன்றே ப்ரமாணம்; அர்த்தமும் காமமுமே புருஷார்த்தங்கள்" இத்யாதிகளே. விஷயபோகங்கள் துக்க ஸம்பிந்நங்களாக இருந் தாலும் அவை புருஷர்களால் அர்த்திக்கக்கூடியவைதாம்; மத்ஸ் யார்த்தி, முள் கல் முதலியவைகளுடன் கூட மத்ஸ்யங்களை உபாதா நம் செய்வது போலும், தாந்யார்த்தி வைக்கோலுடன் கூடவே தாந்யங்களை ஆஹரிப்பது போலும், ஹிதார்த்தியாக இருக்கும் புருஷர்கள் அவர்ஜ்ஜநீயமாக ப்ராப்தமாகும் துக்கங்களைப் பரி ஹரித்து ஸுகாம்ஶத்தை ஆதாநம் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதே உசிதமாகும். இது தான் அவர்களுடைய வாதம்.

नाஸ்திக்யத்தின் வளர்ச்சி

'त्याज्यं सुखं विषयसङ्गमजन्म पुंसां दुःखोपसृष्टमिति मूर्खविचारणैषा ।
व्रीहीन् जिहासति सितोत्तमतण्डुलाढ्यान् को नाम भोस्तुषकणोपहितान् हितार्थी ॥''

இந்த மதத்தை நமது மஹர்ஷிகள் தீவ்ரமாகக் கண்டித் திருக்கிறார்கள். ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனைக் காட்டிலிருந்து அயோத்யைக்குத் திருப்பி அழைத்துவருவதற்காகப் பரதாழ்வான் அரண்யம் சென்று ப்ரார்த்திக்கும் காலத்தில், அந்த ப்ரார்த்த நையை வற்புறுத்தும் பொருட்டு இந்த நாஸ்திக மதத்தை உபந்யஸித்த ஜாபாலி மஹர்ஷிக்கு ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் அநுக்ரஹித்த ஸமாதாநம் எல்லாருக்கும் தெரிந்ததே.

"भवान् मे प्रियकामार्थं वचनं यदिहोक्तवान् । अकार्यं कार्यसङ्काशम्"

[ப்ரிய விஷயத்தில் எனக்கு இச்சை ஸித்திக்கவேண்டு மென்று நீர் எந்த வார்த்தையைச் சொன்னீரோ, அது கார்யம் போல ப்ரதீயமாநமான அகார்யமே] என்று ஜாபாலியின் நாஸ்திக வாக்ய ரூப தர்க்கத்தைக் கர்ஹித்தார்.

"त्वत्तो जनाः पूर्वतरे वराश्च शुभानि कर्माणि बहूनि चक्रुः"

என்று தர்மாநுஷ்டாநத்தில் ஶிஷ்டாசாரத்தையும் ப்ரமாணமாகக் காட்டி, ப்ரத்யக்ஷமே ப்ரமாணமாக மாட்டா தென்றும், மஹா ஜந பரிக்ருஹீத மாயும் அபௌருஷேயமாயு மிருக்கும் வேதமே அதீந்த்ரிய விஷயங்களில் ப்ரமாணமாகு மென்றும், வைதிக கர்மங் களுக்கும் பல முண் டென்றும் ஸ்ரீ ராமன் சொன்ன ஸமாதா நம் ஜாபாலியை அடக்கிற்றன்றோ? " न नास्तिकानां वचनं ब्रवीम्यहम् " என்று, தாம் வஸ்துத: நாஸ்திக னன்று என்பதை அந்த ஜாபாலியும் உடனே வெளியிட்டார். இக்காலத்தில் அம்மாதிரி கண்டிக்கிற மஹா புருஷர்களு மில்லை, ஜாபாலி மாதிரித் திரும்பும் குணமுள்ள நாஸ்திகர்களு மில்லை.

சென்ற ஸஞ்சிகையில் ஒரு பெரியார் தமக்கு நாஸ்திக்யத் தில் இருக்கும் அபிமாநத்தை மஹாஜநங்களுக்கு வெளியிட்டா ரென்பதைப் பற்றி நாம் வருந்தி எழுதி யிருந்தோம். இப்பொழுது மற்றுமொரு மஹான், 'ஜந்மாந்தர கர்மமடியாக நாம் இவ்விடத் தில் ஸுகதுக்கங்களை அநுபவிக்கிறோம் என்று சொல்வது முழு வதும் அஜ்ஞர்களின் வார்த்தை; நமக்கு நேரும் ஸுகதுக்கங்க ளெல்லாம் நம்முடைய புத்தி பௌருஷங்களையே சார்ந்து நிற் கின்றன' என்று அநேக யுக்திகளைக் கொண்டு ஒரு பெரிய ஸங்கத்தில் உபந்யஸித்தார். அந்த உபந்யாஸத்தைச் செய்யுங் காலத்தில், நம்முடைய ஹிந்து மதக் கொள்கைகளையும் பரிஹஸித் துப் பேசினர். அவர் அம்மாதிரி எண்ணம் கொண்டிருப்பதைப் பற்றி நாம் அவ்வளவாக ஶோகிக்கவில்லை. மற்றவர்களுக்கும் அம்மாதிரியான எண்ணத்தை அவர் புகட்டுகிறரே என்று மாத்ரம் நாம் வருந்துகிறோம். இந்த ப்ரஸங்கத்தை அவர் செய்து வந்த பொழுது, அவ்விடத்தில் வந்திருந்த சிறுவர்க ளெல்லாரும் பொரு ளின் பயனைக் கவனிக்காமல், அவருடைய சொற்பொழிவின் அழ கில் மயங்கி, அவருடைய பரிஹாஸோக்திகளால் மிக்க ஆநந்தத்தை யும் அடைந்தார்கள். உயர்ந்த ஸ்திதியில் இருக்கும் பெரியோர்க ளெல்லாரும் இவ்விதம் ஶாஸ்த்ர விருத்தமான உபதேஶத்தைச் செய்ய ஆரம்பித்தால், அவர்களுடைய உபதேஶம் பரவாமல் வீண் போகுமோ? இந்த ஸ்திதியைப் பார்த்தால் தர்மமே அற்றுப் போய்விடுமோ வென்னும் பீதி ஜநிக்கின்றது. இவ்வாறு அதர்மம் மேலிடுவதன் பலமன்றோ இப்பொழுது நமக்கு நேர்ந்துள்ள துர்த் தஶைகள்? அப்படி இராவிட்டால் இந்த யுத்தமும், அதனல் நேரும் த்ரவ்ய நாஶமும், ஜந நாஶமும், துர்ப்பிக்ஷமும், ஸங்காத மரணமும் எப்படி ஸம்பவிக்கும்? அச்யுதன் தர்மப்ரபு வென்றும், ஜகத்தின் ஸ்திதி தர்மம் குலையாமலிருப்பதைச் சார்ந்து நிற்கின்றதென்றும் இத்யாதியான உண்மையை நமது ப்ரபுக்க ளெல்லாரும் எப் பொழுது உணருவார்கள்? ஸ்ரீ ஶரண்யனே அவர்களுக்கு ஆஸ் திக்ய புத்தியை அநுக்ரஹிக்க வேண்டுமென்று நாம் ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.

एको वशी सर्वभूतान्तरात्मा एकं बीजं बहुधा यः करोति ।
तमात्मस्थं येऽनुपश्यन्ति धीरास्तेषां सुखं शाश्वतं नेतरेषाम् ॥ १२

களால், नलिप्यते - தொடப்படாமலே இருக்கிறான். बाह्यः - வெளியிலும் வ்யாபித்து நிற்கிறான்.

ஸூர்யனுக்கும் கண் இந்த்ரியத்துக்கும் ஒருவித ஸம்பந்த முண்டு என்று ஶ்ருதி சொல்லுகின்றது. அந்த ஸம்பந்தமாவது: இந்தக் கண் இந்த்ரியத்தில் ஸூர்யன் ப்ரவேஶித்து நிற்கிறான் என்பதுதான். "रश्मिभिरेषोऽस्मिन् प्रतिष्ठितः - இவன் [இந்த ஸூர்யன்] தனது கிரணங்களால் இதில் [இந்தக் கண் இந்த்ரியத்தில்] ப்ரதிஷ்டிதனாக இருக்கிறான் என்பது ஶ்ருதி.

---

12. 'பகவான் நமக்கு அந்தர்யாமியாக இருக்கிறான் என்னும் உண்மையை எவன் அறிகிறானோ, அறிந்து அவனை எவன் உபாஸிக்கிறானோ அவன்தான் மோக்ஷத்தைப் பெறக்கூடியவன்' என்பது இந்த மந்த்ரத்தால் விவரிக்கப்படுகின்றது.

[ப - ரை.] यः - எவன், एकः - ஒருவனோ [அதாவது: எவனுக்கு ஈடும் எடுப்பும் இல்லையோ], यः - எவன், वशी - ப்ரபஞ்சம் முழுவதையும் தனது வஶமாக உடைத்தாயிருக்கிறானோ, यः - எவன், सर्वभूतान्तरात्मा - ஸர்வபூதங்களுக்கும் அந்தராத்மாவோ, यः - எவன், एकं बीजम् - ஒரே வித்தாக இருக்கும் [தமஸ் என்னும்] தத்வத்தை, बहुधा - பஹுவாக [பலவகைப்பட்ட வஸ்துக்களை யுடைய ப்ரபஞ்ச ரூபமாக], करोति - செய்கிறானோ, तम् - அவனை, ये - எந்த, धीराः - விவேகிகள், आत्मस्थम् - தமக்குள் அந்தர்யாமியாக இருக்கிறானென்று, अनुपश्यन्ति - பார்க்கிறார்களோ [பார்த்து உபாஸிக்கிறார்களோ], तेषाम् - அவர்களுக்கே, शाश्वतं सुखम् - நித்யமான ஆநந்தம்; इतरेषां न - மற்றை ஒருவருக்கும் இல்லை.

'वशी' - என்பதற்கு 'பக்த வஶ்யன்' என்றும் பொருள் கொள்ளக்கூடும். "इमौ स्म मुनिशार्दूल किङ्करौ समुपस्थितौ" - [ஹே மஹர்ஷியே! நாங்கள் இருவரும் உங்களுக்குக் கிங்கரர்களாக நிற்கிறோம்] என்றன்றோ ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுடைய பக்தவஶ்யதை இருக்கிறது?

एकं बीजम् - ப்ரளய காலத்தில் ப்ரபஞ்சம் முழுவதும் 'தமஸ்' என்று வ்யவஹரிக்கப்படும் ஒரு அவஸ்தையை அடைந்து பரமனான தேவனிடத்தில் சேர்ந்து நிற்கிறதென்று ஶ்ருதியில் சொல்லப்படுகிறது. மறுபடியும் ஸ்ருஷ்டியைச் செய்வதாகப் பகவான் ஸங்கல்பிக்கும் பொழுது அவனுடைய ஸங்கல்பமடியாக அந்தத் 'தமஸ்' என்னும் ஒரே தத்வம் 'மஹத்' முதலிய பஹுவித ப்ரபஞ்சமாக மாறுகிறபடியால், அந்தத் 'தமஸ்' என்னும் பீஜத்தைப் பகவான் பஹுவாகச் செய்கிறான் என்று சொல்லப்படுகிறது.

नित्यो नित्यानां चेतनश्चेतनानामेको बहूनां यो विदधाति कामान् ।
तमात्मस्थं येऽनुपश्यन्ति धीरास्तेषां शान्तिश्शाश्वती नेतरेषाम् ॥ १३

“ तदेतदिति मन्यन्ते निर्देश्यं परमं सुखम् ।
कथन्नु तद्विजानीयां किमु भाति विभाति वा ॥” १४

---

13. அப்படி ஒருவனாகவே இருந்துகொண்டு மற்றை ஸகல சேதந வஸ்துக்களுக்கும் அபேக்ஷிதங்களான அர்த்தங்களெல்லாவற்றையும் எவ்வித ஆயாஸமுமின்றிக்கே கொடுத்தருள்கிறான் என்பது இதனாற் சொல்லப்படுகிறது.

[ப-ரை.] **यः** - எந்த, **नित्यः** - நித்யனாக இருக்கும், **चेतनः** - சேதநன், **एक [एव] सन्** - ஒருவனாகவே இருந்துகொண்டு, **नित्यानाम्** - நித்யங்களாக இருக்கும், **बहूनाम्**-பஹுவான, **चेतनानाम्**-சேதநர்களுடைய, **कामान्**-இஷ்டங்களை, **विदधाति** - கொடுக்கிறானோ, **तम्**-அப்படிப்பட்ட [சேதநனை], **आत्मस्थम्** - தனக்குள் அந்தர்யாமியாக இருக்கிறானென்று, **ये धीराः** - எந்த விவேகிகள், **अनुपश्यन्ति**-பார்க்கிறார்களோ, **तेषाम्**-அவர்களுக்கே, **शाश्वती** - எந்நாளும் இருக்கும், **शान्तिः** - ஶாந்தியானது [உண்டு]; **न इतरेषाम्** - மற்றவர்களுக்கு [அது] இல்லை.

இந்த மந்த்ரத்தின் முதல் பாதிக்கு வேறுவிதமாகவும் அந்வயம் செய்யக்கூடும். **नित्यानां नित्यः** - நித்யர்களுக்கெல்லாம் நித்யனாகவும், **चेतनानां चेतनः** - சேதநர்களுக்கெல்லாம் சேதநனாகவும் இருக்கும், **यः** - எவன். [மற்றது முன்போலவே]. ஜீவர்களென்று சொல்லப்படும் வஸ்துக்களெல்லாம் ஸ்வரூப நாஶ மற்றவர்களாதலால் அவை நித்யங்கள்; ஆனால் அந்த நித்யத்வம் பகவானுடைய ஸங்கல்பத்தால் ஏற்பட்டதானபடியால் அது ஸோபாதிகம். பகவானுடைய நித்யத்வமோ நிருபாதிகம். ஆகையால் பகவானை ‘நித்யர்களுக்கெல்லாம் நித்யன்’ என்று சொல்லக்கூடும். இம்மாதிரியே ‘சேதநர்களுக்கெல்லாம் சேதநன்’ என்பதும்.

---

14. இவ்வாறு குரு உபதேஶித்தார். இதைக் கேட்ட ஶிஷ்யனுக்கு ஒரு ஸந்தேஹம் ஜநிக்கின்றது. அவன் ப்ரஶ்நம் செய்கிறான்.

[ப-ரை.] **तत्** - அப்படிப்பட்ட [அலௌகிகமான], **परमं सुखम्** - பரமாநந்த ரூபமான ப்ரஹ்மத்தை, **एतदिति** - இதுவென்று [உள்ளங்கைக் கனிபோல, அபரோக்ஷம்போல], **निर्देश्यम्** - சுட்டிக் காட்டத் தகுந்ததாக, **मन्यन्ते** - [உங்களைப்போன்ற யோகிகள்] எண்ணுகிறார்களே. **कथन्नु** - எப்படி, **तत्** - அதை [ரூபம் முதலியன அற்ற அந்த ப்ரஹ்மத்தை], **विजानीयाम्** - [அப்ரத்யக்ஷமான வஸ்துவை க்ரஹிக்க ஸாமர்த்யமற்ற நான்] அறிவேன்? [**तत्** - அது], **किमु भाति** - ப்ரகாஶத்துடன்

न तत्र सूर्यो भाति न चन्द्रतारकन्नेमा विद्युतो भान्ति कुतोऽयमग्निः ।

கூடியதாக இருக்கிறதா? **विभाति** - ஸ்பஷ்டமாக ப்ரகாஶிக்கிறதா? **[किं] वा [न]** - இல்லாவிட்டால் [மற்றைத் தேஜஸ்ஸுக்களால் மங்கலாகச் செய்யப்பட்டு] அஸ்பஷ்டமாக இருக்கிறதா?

---

15. இந்தக் கேள்விக்கு ஸமாதாநம் சொல்லுகிறுர். அதாவது: "**आदित्यवर्णं तमसःपरस्तात्**"-[தமஸ்ஸுக்கு அப்புறத்தில் ஸூர்யன்போல ஜ்வலித்துக்கொண்டிருக்கிறுன்] என்றும், "**सदैकरूपरूपाय**"-[எப்பொழுதும் எவ்வித விகாரமுமற்றிருக்கும் ரூபத்தை உடைத்தாயிருக்கிறுன்] என்றும் ஶ்ருதிகள் சொல்லுகிறபடி அவனுக்கு திவ்ய மங்கள விக்ரஹமொன்று உண்டு. அதுதான் நமக்கு த்யாநத்திற்கு ஶுபமான ஆலம்பநம். அப்படிப்பட்ட ரூபத்துடன் கூடினவனுக அவன் மற்றை ஜ்யோதிஸ் எல்லாவற்றையும் அதிஶயித்திருக்கும் தீப்தியுடன் ப்ரகாஶிக்கிறுன். இதுதான் அந்தக் கேள்விக்கு ஸமாதாநம்.

[ப - ரை.] **तत्र** - அவ்விடத்தில் [பகவானுடைய ப்ரகாஶத்தின் ஸாக்ஷாத்காரம் நேருமிடத்தில்], **सूर्यः** - ஸூர்யன், **न भाति** - ப்ரகாஶிக்கமாட்டா. **चन्द्रतारकम्** - சந்த்ரனும் நக்ஷத்ரங்களும், **[न भाति** - ப்ரகாஶிக்கிறதில்லை]. **इमा विद्युतः** - இந்த மின்னல்களும், **न भान्ति** - ப்ரகாசிக்கமாட்டா. **अयमग्निः** - இந்த நெருப்பானது, **कुतः** - எப்படி ப்ரகாசிக்கும்? [ஸூர்யன் முதலியவையெல்லாம் மங்கிப் போகுங் காலத்தில் நம்முடைய த்ருஷ்டிக்குக் கோசரமான இந்த அக்நியைப் பற்றி கேட்பானேன்? அதாவது: பகவானுடைய தேஜஸ்ஸால் இவையெல்லாம் மறைக்கப்படுகின்றன. அதற்கு எதிரில் இவையெல்லாம் ப்ரகாஶமற்றவை என்பது தாத்பர்யம்]. **सर्वम्** - எல்லா வஸ்துக்களும், **भान्त तमेव** - ப்ரகாஶிக்கும் அந்தப் பகவானைக் காரணமாகக் கொண்டே, **अनुभाति** - அதை அநுஸரித்தே ப்ரகாசிக்கின்றது. [அதாவது: பரமாத்மாவான தேஜஸ் ஸகல இதர தேஜ: பதார்த்தங்களுக்கும் காரணம்; மற்றை தேஜஸ் எல்லாம் அதன் கார்யம் என்பது தாத்பர்யம். '**अनुभानम्**' என்பதற்குப் 'பிந்தி ப்ரகாசிப்பது' என்பது பொருள். லோகத்தில் காரணம் முன்னும் கார்யம் பின்னுமாகக் காணப்படுகிறபடியால் இவ்விடத்தில் ஸூர்யன் முதலியவை பிந்தி ப்ரகாசிக்கின்றன என்பதற்குப் 'பகவானுடைய தேஜஸ் காரணம், இவைகளின் தேஜஸ் அதன் கார்யம்' என்று சொல்லப்படுகின்றது.] **तस्य** - அவனுடைய, **भासा** - ப்ரகாஶத்தால், **इदं सर्वम्** - இவையெல்லாம், **विभाति** - ப்ரகாஶிக்கின்றன [அதாவது: பகவானுடைய தேஜஸ்ஸால் அநுக்ரஹிக்கப்பட்டே இவைகளின் தேஜஸ் எல்லாம் தம் தம் கார்யமாகிற ப்ரகாஶநத்தில் ஸாமர்த்யத்தைப் பெறுகின்றது].

तमेव भान्तमनुभाति सर्वं तस्य भासा सर्वमिदं विभाति ॥ १५

इति द्वितीयाध्याये द्वितीयवल्ली ॥

இந்த அர்த்தத்தை ஸ்ரீ பாஷ்யத்தில் காணலாம். "**सर्वतेजसां छादकं, सर्वतेजसां कारणभूतं, सर्वतेजसामनुग्राहकम्**" என்பது அந்தத் திவ்ய ஸூக்தி. ஸ்ரீ ஶ்ருத ப்ரகாஶிகாசார்யர் இதைப் பின்வருமாறு விவரித்திருக்கிறார். "இந்த மந்த்ரத்தில் முதல் பாதியின் கருத்தை '**सर्वतेजसां छादकम्**' என்பதாலும், இரண்டாவது பாதியின் முதல் பாகமாகிற '**तमेव भान्तम्**' இத்யாதியின் கருத்தை '**सर्वतेजसां कारणभूतम्**' என்பதாலும், கடைசிப் பாதத்தின் கருத்தை '**सर्वतेजसामनुग्राहकम्**' என்பதாலும் ஸ்ரீ பாஷ்யம் விளக்குகின்றது."

'எல்லா தேஜஸ்ஸுக்கும் காரணமாக இருக்கின்றது பகவானுடைய தேஜஸ்' என்பதன் பொருளாவது: மற்றைத் தேஜஸ்ஸுக்கள் உத்பத்தி பெறும் வ்யாபாரத்தில் பகவானுடைய தேஜஸ்ஸானது நிமித்த காரணம் என்பதுதான். [கார்யமான ஒவ்வொரு வஸ்துவுக்கும் நிமித்த காரணமென்றும் உபாதாந காரண மென்றும் இரண்டுவித காரணங்கள் உண்டு. இவ்விடத்தில் பகவானுடைய தேஜஸ் நிமித்த காரணமாகின்றதே தவிர அது உபாதாந காரணமாகவில்லை; ஏனென்றால் பகவானுடைய தேஜஸ் அப்ராக்ருதம்; இதர வஸ்துக்களின் தேஜஸ் ப்ராக்ருதம். இப்படிப் பகவானுடைய தேஜஸ் விஸஜாதீய மாகையால், அது உபாதாந காரணமாக மாட்டாது. உபாதாநமும் உபாதேயமும் ஸஜாதீயங்களாகவன்றோ இருக்கவேண்டும்? இது இவ்விடத்தில் கவனிக்கத் தக்கது]. 'அநுக்ராஹக மாகவும் அது இருக்கின்றது' என்பதன் பொருளாவது: ஒருவஸ்து உத்பத்தி பெறுவதற்கு உபகாரகமாயிருப்பதைக் காரண மென்றும், உத்பந்நமான வஸ்து தனக்கு உரிய வ்யாபாரத்தைச் செய்வதில் உபகாரகமாயிருப்பதை அநுக்ராஹக மென்றும் சொல்வார்கள். இவ்விடத்தில் உத்பந்நமான ஸூர்ய தேஜஸ் முதலிய தேஜஸ்ஸுக்கள் தங்கள் தங்களுக்கு உரிய ப்ரகாஶந ரூப வ்யாபாரத்தைச் செய்வதற்கு அபேக்ஷிதமான ஸாமர்த்யத்தைப் பகவானுடைய தேஜஸ்ஸிலிருந்தே பெறுகிற படியால் அது அவைகளுக்கு அநுக்ராஹக மாகின்றது. இந்த அநுக்ராஹகத்வமே "**तस्य भासा सर्वमिदं विभाति**" - என்னும் நாலாவது பாதத்தால் விவரிக்கப்படுகின்றது.

'இவ்விடத்தில், பகவானுடைய தீப்தியின் ஸாக்ஷாத்காரம் நேருமிடத்தில் ஸூர்யன் முதலானவை [**न भान्ति**] - ப்ரகாஶிக்கவில்லை என்று சொல்லப் பட்டிருக்கின்றதே. அது யுக்தமா? முக்தர்களும் அர்ஜுநனைப் போன்ற திவ்ய சக்ஷுஸ்ஸைப் பெற்றவர்களும் பகவானுடைய தேஜஸ்ஸை ஸாக்ஷாத்கரித்துக் கொண்டிருக்கும் பொழுதே மற்றைத்

தேஜஸ்ஸுக்களையும் ஸாக்ஷாத்கரிக்கிறார்களன்றோ?' என்று ஒரு ஸந்தேஹம் ஜநிக்கக் கூடும். இதற்கு ஸமாதாநமாவது: **न भान्ति** - [ப்ரகாசிக்கவில்லை] என்பதற்கு 'இவை ப்ரகாஶிக்காமலே போய்விடுகின்றன' என்பது தாத்பர்யமன்று. 'பரமாத்மாவின் ரூபம் அதிபாஸ்வரம்' என்பதே அதன் தாத்பர்யம்.

பரமாத்மா ஸ்பஷ்டமாக ப்ரகாஶிக்கின்றதா? என்று ஶிஷ்யன் கேட்டதற்கு இந்த மந்த்ரத்திற் சொல்லப்பட்டது ஸமாதாநமாகின்றது. 'அதை நீங்கள் ஸாக்ஷாத்தாகத் தர்ஶிக்கிறீர்களே; அப்படி நான் எவ்விதம் அதைப் பார்ப்பேன்' என்னும் ஸந்தேஹத்திற்கு ஸமாதாநத்தை இந்த மந்த்ரத்தில் காணோமே' என்று ஒரு ஶங்கை உண்டாகலாம். அந்த ஶங்கையை உத்தேஶித்தே ஆசார்யர்கள் 'இந்த மந்த்ரத்தில் பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹம் விவக்ஷிதம்' என்று விவரித்திருக்கிறார்கள். அந்த விக்ரஹமே உபாஸகர்களின் த்யாநத்திற்கு ஶுபமான ஆலம்பநமாகின்றது.

இரண்டாவது அத்யாயத்தில் இரண்டாவது வல்லி முற்றிற்று.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 FEB 1944
MADRAS

श्रीः

॥ अथ द्वितीयाध्याये तृतीयवल्ली ॥

हरिः ओम् ॥

ऊर्ध्वमूलोऽवाक्छाख एषोऽश्वत्थस्सनातनः ।
तदेव शुक्रं तद्ब्रह्म तदेवाऽमृतमुच्यते ।
तस्मिन् लोकाः श्रितास्सर्वे तदु नात्येति कश्चन ॥ एतद्वै तत् ॥ १ ॥

ஸ்ரீ :

இரண்டாவது அத்யாயம் மூன்றுவது வல்லி

இது பர்யந்தம், ஜகத் முழுவதிலும் பரமாத்மா அந்தர்யாமியாக இருக்கிறுன் என்பதையும், அப்படி இருக்கையிலும் ஜகத்தில் தென்படும் தோஷங்களால் அவன் ஸ்பர்ஶிக்கப்படாமலே இருக்கிறுன் என்பதையும் விஸ்தாரமாகவும் ஆதராதிஶயத்தால் திரும்பத் திரும்பவும் பல தடவை விவரித்துவிட்டு, இனி அந்தராத்மாவாக இருக்கும் அவனுக்கும் அவனுடைய ஶரீரமாக இருக்கும் சேதநா சேதநங்களுக்குமுள்ள வைலக்ஷண்யத்தை விளக்கி, அவனுடைய ஸகல நியந்த்ருத்வம் முதலான மஹிமையை ப்ரஸ்தாவித்து, தேஹத்தைக் காட்டிலும் விலக்ஷணமான ஆத்ம யாதாத்ம்ய ஜ்ஞாநம் மாத்ரம் பகவத் ப்ராப்திக்கு அபர்யாப்தமென்றும், பகவச் சரணுகதியே அதற்குப் பர்யாப்தமான உபாயமாகுமென்றும் சொல்லி ஆக்யாயிகையை முடிக்கிறுர்.

1. முதல் மந்த்ரத்தில் ஸம்ஸாரம் ஹேயம் என்பதை விளக்கும் பொருட்டு அதை ஒரு வ்ருக்ஷமாகப் பேசுகிறுர். வ்ருக்ஷமாகப் பேசுவதன் கருத்து என்னவென்றுல், வ்ருக்ஷம் எப்படி வெட்டத்தகுந்த பதார்த்தமோ அம்மாதிரியே ஸம்ஸாரமும் சேதிக்கத்தகுந்ததே என்பதை ஸூசிப்பிக்கவேண்டு மென்பதுதான். வ்ருக்ஷம் என்னும் பதம் எந்தத் தாதுவிலிருந்து உண்டானதோ அந்தத் தாதுவுக்கு 'வெட்டுதல்' என்பது பொருள். பகவத் கீதையில் ஐந்தாவது அத்யாயம் முதல் ஶ்லோகத்திலும் இதே வர்ணநத்தைக் காணலாம்.

"ऊर्ध्वमूलमधश्शाखमश्वत्थं प्राहुरव्ययम् ।
छन्दांसि यस्य पर्णानि यस्तं वेद स वेदवित् ॥"

இந்த ஸம்ஸார வ்ருக்ஷத்திற்கு எல்லா லோகங்களுக்கும் மேல் இருக்கும்படியான சதுர்முக லோகம் ஆதியாகிறபடியால் அதற்கு வேர் உயர இருக்கின்றது என்றும், பூமியில் இருக்கும் ஸகல ஜந்துக்களும் அதற்கு அந்தமாகிறபடியால் அதன் கிளைகள் கீழ்நோக்கி இருக்கின்றன வென்

यदिदं किञ्च जगत्सर्वं प्राण एजति निस्सृतम् ।
महद्भयं वज्रमुद्यतं य एतद्विदुरमृतास्ते भवन்ति ॥ २ ॥

றும், அஸங்கத்திற்கு ஹேதுவான ஸம்யக் ஜ்ஞாநம் வரும் பர்யந்தம் அது ப்ரவாஹ ரூபமாக வளர்ந்துகொண்டே இருக்கிறபடியால் அது ஸநாதந மென்றும் சொல்லப்படுகின்றது. இந்த ஸம்ஸார வ்ருக்ஷத்தை அச்வத்த வ்ருக்ஷமென்று வர்ணிப்பதற்கும் ஒரு காரணம் உண்டு. "**श्वो न स्थास्यतीत्यश्वत्थः**" [நாளை நிற்காததாகையால் அச்வத்தம். ஸம்யக் ஜ்ஞாநம் ஜநித்து அதனால் அஸங்கம் ஏற்பட்டுவிட்டால், உடனே ஸம்ஸாரம் போய்விடு மாதலால் அது நாளைநிற்கமாட்டாது என்று சொல்லக்கூடும்]. ப்ரஹ்மத்தைப் பற்றிப் பேசவேண்டிய இடத்தில் ஸம்ஸாரத்தைப்பற்றிப் பேசுவது எப்படி ஸங்கதமாகு மென்றால், பகவானுடைய விபூதியாகிற ப்ரபஞ்சத்தை ப்ரதிபாதிப்பது, அவன் அதைக் காட்டிலும் அத்யந்த விலக்ஷணன் என்பதை விளக்கும் பொருட்டாகு மன்றோ? பர தத்வத்தை அறியவேண்டு மென்னும் இச்சைக்குக் காரணமாயிருக்கும் வைராக்யத்தை ஜநிப்பிக்கும் பொருட்டென்றும் சொல்லக் கூடும்.

[ப - ரை] **एषः** - இந்த, **अश्वत्थः** - [ஸம்ஸாரமாகிற] அச்வத்த வ்ருக்ஷமானது, **ऊर्ध्वमूलः** - உயர இருக்கும் வேரை உடையது; **अधश्शाखः** - கீழ்நோக்கிச் செல்லும் கிளைகளை உடையது; **सनातनः** - எப்பொழுதும் இருப்பது [அதாவது: ப்ரவாஹ ரூபமாக வ்யயமற்றது]. **तदेव शुक्रम्**........[இதன் அர்த்தத்தை முந்தினவல்லி 8-வது மந்த்ரத்தில் காண்க]. 'இந்த ஸம்ஸார வ்ருக்ஷம் இப்படிப்பட்டது; அந்த ப்ரஹ்மமே ப்ரகாசகமானது' என்று சொல்வதால் வைலக்ஷண்யம் வெளியாகின்றது.

---

2. 'ஜகத் முழுவதும் அந்தப் பரமாத்மாவில் ஸ்திதியைப் பெற்றிருக்கின்றது; அவனிடமிருந்தே ஜநித்தது; அவனிடமிருந்து பயந்தே தன் தன் கார்யத்தில் ப்ரவர்த்திக்கின்றது' என்று சொல்லி அவனுடைய பெருமையைப் பேசுகிறது இந்த மந்த்ரம்.

[ப - ரை] **इदम्** - இந்த [அதாவது: அசிந்த்யமான பல வித ரசனையை உடைத்தாயிருப்பதாலும் ப்ரஹ்மாதி ஸ்தம்ப பர்யந்தமான வஸ்துக்களுடன் கூடியதாய் இருப்பதாலும் ப்ரத்யக்ஷம் முதலிய ப்ரமாணங்களால் ஸித்தமான], **यत् किञ्च सर्वं जगत्** - எந்த ஜகத் முழுவதும் [அதாவது: ஈச்வரன் நீங்கலான போக்ய போக்த்ரு ரூபமான ஸகலமும்], **प्राणे** - ப்ராண சப்த நிர்த்திஷ்ட புருஷனிடத்தில் [இருப்பையுடையதோ]; **निस्सृतम्** - [அந்த ப்ராண சப்த நிர்த்திஷ்ட புருஷனிடமிருந்தே] வெளி வந்திருக்கிறதோ, [**तत्** - அந்த ஜகத் முழுவதும்], **उद्यतं वज्रम्** - உயரத் தூக்கப்பட்டிருக்கும் வஜ்ரத்தை உடையவர்போல இருக்

भयादस्याग्निस्तपति भयात्तपति सूर्यः ।
भयादिन्द्रश्च वायुश्च मृत्युर्धावति पञ्चमः ॥ ३ ॥

इह चेदशकद्बोद्धुं प्राक्छरीरस्य विस्रसः ।
ततस्सर्गेषु लोकेषु शरीरत्वाय कल्पते ॥ ४ ॥

यथादर्शे तथाऽऽत्मनि यथा स्वप्ने तथा पितृलोके ।
यथाऽप्सु परीव ददृशे तथा गन्धर्वलोके छायातपयोरिव ब्रह्मलोके ॥ ५ ॥

கும் பரம புருஷனிடமிருந்து, **महद्भयम्** - பெரிய பயத்தினுல், **एजति** - நடுங்குகிறது [அதாவது : தன்தன் கார்யத்தில் ப்ரவர்த்திக்கின்றது].

महत्, भयम्, वज्रम्, उद्यतम् - இந்நான்கு பதங்களும் முதல் வேற்றுமையின் ரூபத்தை உடைத்தாயிருக்கையிலும், ஐந்தாம் வேற்றுமையின் அர்த்தத்தை உடையன என்பது கவனிக்கத்தக்கது. இவைகளுள் முதல் இரண்டு பதங்கள் பயத்தையும், மற்றை இரண்டு பதங்கள் அந்தப் பயத்திற்கு ஹேதுவாக இருக்கும் பரப்ரஹ்மத்தையும் குறிக்கின்றன. ஆகையால், அவைகளை **उद्यतवज्रादिव परमपुरुषात् सञ्जातेन भयेन** - என்று எடுத்துக்கொள்ள வேண்டும்.

---

3. கீழ் மந்த்ரத்திற் சொல்லப்பட்ட விஷயமே இதில் விவரிக்கப் படுகின்றது.

[ப-ரை] **अस्य भयात्** - இவனிடமிருந்து பயத்தால், **अग्निः**- அக்கியானது, **तपति**-எரிக்கிறது; **भयात्** - [அந்தப்] பயத்தாலேயே, **सूर्यः** ஸூர்யன், **तपति** - ஜ்வலிக்கிருன்; **भयात्** - [அந்தப்] பயத்தாலேயே, **इन्द्रश्च** - இந்த்ரனும், **वायुश्च** - வாயுவும், **पञ्चमः** - ஐந்தாவதாக இருக்கும், **मृत्युः** - ம்ருத்யுவும், **धावति** - ஓடுகிருன். [அதாவது :—எல்லாரும் தங்கள் தங்கள் வ்யாபாரத்தில் ப்ரவ்ருத்தியைச் செய்கிருர்கள்.]

---

4. ஜகத் ஸ்திதி இவ்விதம் இருக்கின்றது என்பதை நம்முடைய ஶரீரம் இருக்கும் காலத்திலேயே நாம் அறிந்து கொள்ளவேண்டும்; அறியாவிட்டால் ஸம்ஸாரம் நம்மை விடாது.

[ப-ரை] **शरीरस्य** - ஶரீரத்தின், **विस्रसः प्राक्** - விழுகைக்கு முன், **इह** - இந்த லோகத்திலேயே, **बोद्धुम्** - [ப்ரஹ்மத்தை] அறிவதற்கு, **अशकश्चेत्** - ஶக்தியற்றவனுக இருக்கும் பக்ஷத்தில், **ततः** - அந்தக் காரணத்தால், **सर्गेषु** - ஸ்ருஷ்டியைப் பெறும் **लोकेषु** - லோகங்களில், **शरीरत्वाय** - சிதறிப்போகும் ஸ்வபாவமுள்ள ஶரீரத்தன்மையின் பொருட்டு, **कल्पते** - ஆகிருன்.

---

5. ஆத்ம தத்வத்தை உள்ளபடி அறிவது மிகவும் ஶ்ரம ஸாத்யம் என்பது இதில் சொல்லப்படுகிறது. ஒரு லோகத்திலும் அந்த் தத்வம் ஶுத்தமாக அறியப்பட மாட்டாதாம்.

Supplement to this issue of "SRI NRISIMHA PRIYA".

திவ்ய ப்ரபந்த காலண்டர்

1944

சுமார் 10" × 14" அளவுகொண்டது

12 தாள்கள் கொண்டது

மஹா விஷ்ணுவின் பல அம்சங்களை, அதி அற்புதமாக ஒவ்வொரு மாதத்திலும் அச்சிட்டுள்ளோம். ஆய்ந்தெடுத்த பாசுரம் ஒன்று அழகாக மாதா மாதம் அமைத்துள்ளோம். **இரண்டு கலரில்** நிகரின்றி அச்சிட்டுள்ளோம். தமிழ் இங்கிலீஷ் தேதிகள், விசேஷ தினங்கள் முதலியவைகள் கொடுக்கப்பட்டுள.

இதன் விலை அணா 3¾

குறிப்பு :— *தனிப்பிரதி வேண்டுவோர் எட்டு அணா மணியார்டர் செய்க.*

For copies, apply to :

1. **A. S. V. RAGHAVAN c/o**
   The Office Equipment Co., 2, Armenian St., Madras.
2. **Messrs. M. DAMODARAN & Co.,**
   Book-sellers, Appah Building, Esplanade, Madras.
3. **The ARCOT PRESS, Villupuram.**

The GOOD-LUCK WALL CALENDAR, 1944

Size : About 13″×8″

This is a very beautiful calendar fit to adorn the walls of any office, firm, house or palace ; printed in double colour. Holidays are printed in red.

Price 3¾ as. per copy. Postage & Registration 4¼ as. extra.

On receipt of an m. o. for 8 as. a copy of the calendar will be sent per Registered Post.

Over 500 Pages!

THE SHAKESPEREAN DIARY, 1944

A novel and attractive diary strongly bound on Boards.

Size : **About 5″×3·75″ — A day to a page**

**Price Re. 1-14-0 per copy.
Postage & Registration 6 as. extra.**

On receipt of an m. o. for Rs. 2-4-0 we shall send a copy of the Diary per Registered Post.

List of Contents

Publishers' Prayer to GOD — A Brief sketch of Shakespere's Life—What Others Have said about Shakespere — Diaries and their Uses (An essay)—The Value of a smile at Christmas—Resolutions—On Holidays (Longfellow) — Some Useful Tips — Health Hints — Habits — The Value of Friendship — Think and Thrive — Time — Conversation—Economy — Help in case of Accidents — Alphabet of Success — In associating with Others — Judge Yourself — Boys Wanted — Impossible A Cartoon—Hints on Punctuation — Use of Capitals — How to Achieve ? — Who is a Fool ? — How to correct faults in others — Tips to Social Success — On Reading — The Dictionary and how to use it—On England (Shakespere) — Hints on Letter-Writing—War And Our Duty—New Moon, Full Moon etc. Tables—Calendar For 1945—Abridged Calendar for 1944—Calendar for 1901 to 1960—Statement Showing Rahu, Kuligai etc. Kalams—Eclipses in the Year 1944 — Hindu Festivals 1944 — Mohamedan Festivals 1944—Christian Festivals 1944—Public Holidays in 1944—Postal Information — Scientific Oddities — Interest Calculator — The Wages Calculator — The Alphabetical Fortune Teller —Diary for 1944 — Memoranda — Servants' Wages Tables — 12 pages of monthly Cash Accounts — Addresses — Memoranda.

TAMIL Section : This section contains a good deal of very useful information for all Tamil-Houses.

THE ARCOT PRESS, VILLUPURAM. (S.I.Ry.)

Supplement to this issue of "SRI NRISIMHA PRIYA".

The "Queen-Anne"

DAILY PROMPTER, 1944

(*Usually called* "**The Remembrancer**")

This is a daily engagement pad worthy of being kept on your table.

Size is roughly 7½" × 10"

Price Re. 1-4-0. Postage & Registration 7 as. extra.

Please send an m. o. for Re. 1—11—0 for a copy of the above Prompter.

The get-up of the PROMPTER is most fascinating and modern. In short, it is **charming** ! Buy a copy and enjoy its use throughout the year !!

Contents

Daily Engagements — The Value of A Smile at Christmas — Resolutions — On Holidays—Eclipses in the Year 1944 — Hindu Festivals—Mohamedan Festivals—Christian Festivals—New Moon, Full Moon, Krithigai-Vrathams, etc. —Postal Information—How to Achieve ?—Public Holidays in 1944—Judge Yourself — The Alphabetical Fortune Teller—Health is The Wealth—Abridged Calendar for 1944 — Interest On Securities and loans per annum—The Wages Calculator—Blank pages for permanent Memoranda for the year.

THE ARCOT PRESS

Producers of

HIGH GRADE

RULING, BINDING & PRINTING

ENGLISH, TAMIL, DEVANAGARI, HINDI & GRANTHAM

VILLUPURAM

(S. I. RY.)

THE ARCOT PRESS, VILLUPURAM. (S.I.Ry.)

Supplement to this issue of "SRI NRISIMHA PRIYA".

ஜைமினி பஞ்சாங்கம்-1944

☞ சுவற்றில் மாட்டக்கூடிய இரண்டு கலரில் அச்சிட்ட இங்கிலீஷ் தமிழ் தேதிகள் கொண்ட அழகான காலண்டர்

சைஸ் சுமார் 10" X 15"

ஜைமினி மகரிஷியானவர் வியாஸ பகவானின் சிஷ்யர். நித்ய கர்மா நுஷ்டான விதியை நிர்ணயித்த நீதிமான். அவரை அடிவணங்கித் தொடங்குந் தினஸரி ஸத்காரியங்கள் என்றும் மங்களகரமாகத் திகழும். ஆதலின் நாமும், அம் மஹானின் பெயரை முன்னிட்டு, இந்தப் பஞ்சாங்கத்தைப் பதிப்பித்துள்ளோம்.

ஒரு பிரதி விலை அணு $7\frac{1}{2}$; தனிப் பிரதி வேண்டுவோர் ரூ. 0-12-0 மணியார்டர் செய்தால், ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புவோம்.

கணபதி தோத்திரம் — ஜைமினி துதி — முன்னுரை — சூர்ய பகவான் வணக்கம் — சுபானு வருஷ பலன் — தாரண வருஷ பலன் — நவக்கிரஹங்களைப் போற்றுக — ஸ்ரீ கிருஷ்ண த்யானம் — பிரார்த்தனை — 1944-ஆம் ஆண்டில் ஸகல நலமும் உண்டாகுக! — 1944-ஆம் ஆண்டு சுபமுகூர்த்தங்கள் — 1944-இல் நவநாயகர்கள் — சூர்ய க்ரஹணம் — சந்திர க்ரஹணம் — 1944-ஆம் ஆண்டு மகர சங்கராந்தி விசேஷ பலன் — நடராஜா அபிஷேக தினங்கள் — இராசி ஆதாயம், இராசி விரயம் — அமாவாசை, பௌர்ணமி முதலிய விரதங்கள் — திருநக்ஷத்திரங்கள் — (i) ஆழ்வார்கள், (ii) ஆசாரியர்கள், (iii) ஸிம்மாசனாதிபதிகள் — மத்வ குருபரம்பரை புண்ணிய தீர்த்தங்கள் — சிவனடியார்கள் முக்திபெற்ற தினங்கள் — சிவனடியார்கள் (நாயன்மார்கள்) — 1944-ஆம் வருஷத்திய சகல தேவாலய உற்சவங்கள் — இந்து பண்டிகைகள் — மகம்மதிய பண்டிகைகள் — கிருஸ்துவ பண்டிகைகள் — கர்ப்போட்டம் — 1944-ஆம் ஆண்டு தேதி மழை — Public Holidays in 1944 — Calendar for 1945 — Calendar for 1901 to 1960 — தமிழ் தேதிக்குச் சரியான இங்கிலீஷ் தேதி — அஷ்டாங்க விவரங்கள்: — அஷ்டாங்கத்தில் முதற்பிரிவு திரியாங்கம் முதலாவதங்கம் சதுர்யுகம் — வருட நாமங்கள் — மாச நாமங்கள் — திதி நாமங்கள் — வார நாமங்கள் — நக்ஷத்திர நாமங்கள் — யோக நாமங்கள் — கரணமும் அவற்றின் உருவ நாமங்களும் — நவக்கிரஹங்களாவன — ராசிகளாவன — சத்த வருஷங்கள் — அரசர்களுடைய ஆப்தங்கள் — அயனமாவன — சிறு பொழுதாவன — பெரும்பொழுது (or) இருதுக்கள் — சூர்யவீதி மாதங்களாவன — சங்கர்ப்ப மாசமாவன — இங்கிலீஷ் மாதங்கள் — தெலுங்கு மாதங்கள் — துருக்கர் மாதங்கள் — மாதமொவ்வொன்றிற்குள் நாள் நாழிகை, விநாடி — மாத சூன்யம் — கரிநாள் — அமிர்தாதி யோகங்கள் — தினசரி இலக்கினம் பார்க்க — 27 நட்சத்திரங்களும் அவற்றுள் செய்யக்கூடிய சுப காரியங்களும் — இராகுகாலம், குளிகர்கள் காலம் முதலியவைகள் — எவை, எப்போது செய்யலாம்? — பல்லி பலன்? சொன்னால், விழுந்தால் — கௌரி பஞ்சாங்கம் — கருட தரிசனம் — பட்சி சகுனங்கள் — ஆந்தை கூவுதல் (சகுனம்) — சுப, அசுப சகுனங்கள் — தூங்கி விழித்தவுடன் பார்க்கத்தக்கவை — நல்ல பிள்ளை யார்? — [illegible] விதிகள் — ஸ்ரீ துளசி ஆருட சக்கரம் — 12 மாத காலண்டரும் பஞ்சாங்கமும்.

THE ARCOT PRESS, VILLUPURAM. (S.I.Ry.)

20/2/

ஸ்ரீ:

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—12—'43 to 31—12—'43

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

For 1943.

				Rs.	A.
122	Sri	P. S. Krishnaswami Iyengar, Melur	...	3	0
225	„	A. Madhava Iyengar, Bangalore	...	3	0
539	„	S. Sampath Narayana Iyengar, Sholingur	...	4	0
284	„	K. N. Desikachariar, Trivellore	...	3	0
101	„	K. R. Srinivasaraghavan, West Mambalam	...	3	0
279	„	S. Gopalaswami Iyengar, Mylapore	...	3	0
294	„	I. Srinivasachariar, Mylapore	...	1	0
357	„	K. Gopalaswami Iyengar, Thiruvadamaruthur	...	3	0
143	„	T. K. Nambi Iyengar, Mylapore	...	3	0
183	„	R. . Sundararaja Iyengar, Thuvaraiman	...	3	0
299	„	V. Srinivasa Iyengar, Vridhachalam	...	3	0
240	Rao Saheb	D. Srinivasa Iyengar, Kumbakonam	...	3	0
222	Sri	K. Kuppuswami Iyengar, Aduthurai	...	3	0
378	„	K. Rajagopala Iyengar, Thirupullani	...	3	0
345	„	K. V. Rangaswami Iyengar, Nungambakkam	..	3	0

For 1944

539	„	S. Sampath Narayana Iyengar, Sholingur	...	3	0
5	„	V. R. Narayanan, Bangalore	...	3	0
506	„	K. V. Srinivasagopaladesikachariar, Vaigainallur	...	3	0
451	„	K. R. Srinivasa Iyengar, Seshapuram	...	3	0
130	Rao Bahadur	C. V. Vijayaraghavachariar, Kolhapur	...	3	0
195	Sri	R. Ramaswami Iyengar. Kolar Gold Field	...	3	0
1	„	V. Rangaswami Iyengar, Mohanur	...	3	0
2	„	M. N. Srinivasaraghachariar, Mohanur	...	3	0
516	„	T. Srinivasaraghavachariar, Sholavandan	...	3	0
190	„	R. Sundararajan, Madura	...	3	0
75	„	T. S. Narasimhachariar, Mayavaram	...	3	0
74	„	P. R. Krishnaswami Iyengar, Bangalore	...	3	0
83	„	K. R. Narasimhan, Bangalore	...	3	0
500	„	K. R. Srinivasan, Calcutta	...	3	0
134	„	A. V. Gopalachariar, Trichy	...	3	0
240	Rao Saheb	D. Srinivasa Iyengar, Kumbakonam	...	3	0
542	Sri	V. Krishnamachariar, Chittoor	...	3	0
178	„	Chakravarthy V. Jagannadhachariar, Kumbakonam	...	3	0
543	„	Sarangapani Iyengar, Anatur	...	3	0
234	„	V. T. Vedantaramanujachariar, Poonamallee	...	3	0
544	„	R. Ramaswami Iyengar, Matunga, Bombay	...	3	0

Regd. No. M. 4437

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்கள் ரூ. அ. பை	மற்றவர்கள் ரூ. அ. பை
1. அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8—0	7—8—0
2. ஷை (பைண்டில்லாதது) ...	5—8—0	6—8—0
3. உக்திநிஷ்டாபரணம் ந்யாஸநிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0-12—0	1—0—0
4. உக்திநிஷ்டாபரணோத்யோதம் (,,)	0—8—0	0-12—0
5. வீக்ஷாரண்யக்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் .. (க்ரந்த லிபி)	1—0—0	1—8—0
6. ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் (,,)	0—8—0	0-12—0
7. ஷை (தெலுங்கு லிபி)	0-12—0	1—0—0
8. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—8—0	0-12—6
9. ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3—0	0—4—0
10. ஸ்ரீ பாஷ்யார்த்த மணிப்ரவாள தீபிகை (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0
11. ஸ்ரீ ராமாநுஜஸித்தாந்தஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0—0	3—0—0

N. B.—10, 11 எண்ணிக்கையிட்ட புஸ்தகங்கள் கொஞ்சம் காபிகளே கைவசமிருக்கின்றன.

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள் கீழுள்ள விலாஸத்திற்கு எழுதவும் :—

மானேஜர், **ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**
நெ. 5, ராமஸ்வாமி தெரு, தி. நகர், சென்னை.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras
Edited & Published by S. Vasudevachariar, 5 Ramaswami Street, Tyagarayanagar, Madras.